www.padippakam.com

# இலங்கையில் ஈழமும்
# கனடாவில் கியூபெக்கும்



ஈழத்திற்கு
பூசப்பட்டிருப்பது
சிவப்பு வண்ணமல்ல,
தமிழர் ரத்தம்!
தமிழீழத்திற்கு ரத்தச்சேறு
பூசிக்கொண்டே இருக்கும்
சிங்களத்தின் வண்ணம் - வெறும்
கருப்பல்ல;
'நட்பு' கண்ணாடி
எடுத்துக்காட்டும்
சிங்கள இருட்டு மனங்களின்
பதிவுத்திரட்டே

படிப்பகம்

www.padippakam.com

முதற்பதிப்பு : சனவரி 1997

இலங்கையில் ஈழமும்
கனடாவில் கியூபெக்கும்

ஆசிரியர் : ஆதவன் சேதுவராயன்

© ஆசிரியர்

வெளியீடு : தமிழி பதிப்பகம்
பழக்காரனூர்,
கணக்கப்பட்டி (அஞ்சல்)
நங்கவள்ளி (வழி)
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு - 636 454

அச்சிட்டோர் : சரவணா ஆப்செட் அச்சகம்,
நங்கவள்ளி.

விலை : ரூ. 15/-

படிப்பகம்

www.padippakam.com

# இலங்கையில் ஈழமும் கனடாவில் கியூபெக்கும்

- ஒரு கண்ணோட்டம்.

## இருப்பு நிலை

### ஈழம்

இலங்கையின் மொத்த பரப்பளவான 25 ஆயிரம் சதுர மைல்கள் பரப்பளவில் 10 ஆயிரம் சதுர மைல்கள் பரப்பளவை கொண்டிருந்த ஈழம், இப்போது பௌத்த சிங்கள பேரினவாத மக்களாலும், அரசுகளாலும் 8 ஆயிரம் சதுர மைல்களாக குறைக்கப்பட்டிருக்கிறது. தனித்த வரலாறும், பாரம்பரியமும், மொழியும், சிங்களவர் மதத்திலிருந்து மாறுபட்ட மதங்களும் கொண்ட பகுதி. தனித் தமிழரசு அமைத்து தமிழ் மன்னர்கள் ஆண்ட பகுதி. இலங்கையின் மொத்த கடற்கரையின் நீளம் 1,770 கி.மீ. இதில் 65% கடற்கரையை கொண்டிருப்பது ஈழம்.

**அட்டவணை-1** இலங்கையின் பிரதான இனங்களின் மக்கள் தொகை விழுக்காடு : 1901 - 1981.

| வருடம் | சிங்களர் % | இலங்கை தமிழர் % | இந்திய வம்சாவழி தமிழர் | இஸ்லாமிய தமிழர் |
|---|---|---|---|---|
| 1901 | 65.4 | 26.7 | * | 6.4 |
| 1946 | 69.2 | 11.0 | 11.7 | 5.6 |
| 1953 | 69.3. | 10.9 | 12.0 | 5.7 |
| 1963 | 71.2 | 11.1 | 10.6 | 6.3 |
| 1971 | 71.9 | 11.1 | 9.4 | 6.5 |
| 1981 | 73.98 | 12.6 | 5.56 ** | 7.12 |

× 1901-ஆம் ஆண்டுவரை தமிழர்கள் அனைவரும் இலங்கைத் தமிழரென்றே கணிக்கப்பட்டனர்.

×× இந்திய வம்சாவழி தமிழர் அன்னியர் ஆக்கப்பட்டு வெளியேற்றப்பட்டதால் இறைந்துவிட்டது.

மக்கள் தொகையில் 1911-ல் சிங்களர் 66%-மும், தமிழர் 32.2%-மும் இருந்தனர். ஆனால் 1981-ல் சிங்களர் 74%-மும், தமிழர் 25.3%-மாகவும் ஆகிவிட்ட நிலை. 1981-ஆம் ஆண்டின் கணக்கின்படி தமிழ் பேசும் மக்கள் (ஈழத்திலும், இலங்கையின் பிற பகுதிகளிலும் சேர்த்து) 37,97,118 பேர்கள். 1995-ன் கணக்கின்படி இலங்கையின் மொத்த மக்கள் தொகை 180 லட்சம். இதில் 45 லட்சம் பேர்கள் தமிழர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

1948-ல் இங்கிலாந்திடமிருந்து சுதந்திரம் பெற்ற இலங்கையின் சுதந்திரம், ஈழத்திற்கும் மொத்தத் தமிழர்களுக்குமான அடிமை சாசனம்தான் என்று நடைமுறைகள் உறுதி செய்தன. ஆட்சி அதிகாரம் பௌத்த சிங்களவருக்கு கைமாறியது மூலம் தமிழர்கள் ஓயாத தொல்லைகளுக்குள்ளாவதாய் இருக்கும் பகுதி. அதனால் உரிமைப் போராட்டம் நிகழும் களமாய் இருப்பது.

பெரும்பான்மை பௌத்த சிங்கள வெறியூட்டப்பட்ட மக்களும், அவர்களால் தெரிவு செய்யப்பட்ட அரசுகளும் மாறி மாறி அதிகாரத்திற்கு வருவதும், ஈழம் மாநில உரிமை கூட இல்லாது இருப்பதும், அதனால் பௌத்த சிங்கள வெறி அநீதி அரசினால் தமிழரும், தமிழருக்கான உரிமைகளும் நசுக்கப்படுவது ஓய்ாது நிகழும் கொலைக் களமாய் இருப்பது.

ஆட்சி அதிகாரம், மொழியுரிமை, அரசுப்பணி, கல்வி, நாட்டு வளங்களைப் பங்கிட்டு கொள்ளுவது, இன்ன பிறவற்றிலும் அநீதி நடந்துகொண்டே வருவதால், தமிழ் மக்களின் மனங்கள் அந்நியப்படுத்தப்பட்டு, போர்க்களமாக்கப்பட்டு வரும் நிலை.

ஒரு அறிஞரின் கூற்றுப்படி, "போரின் தொடக்கம் போர்க்களத்திலல்ல; மனதில்" என்பதை உறுதி செய்து இன்று போர்க்களமாகி இருப்பது.

## கியூபெக்

10 மாநிலங்களையும், 4 பிரதேசங்களையும் கொண்டு உலகின் மிகப்பெரிய நாடாக திகழும் கனடாவிலிருக்கும் பெரிய மாநிலம். வளமானது; கனடாவின் தொழில் உற்பத்தியில் இதன் பங்கு 25 சதவீதமாகும்.

1763-ஆம் ஆண்டு பிரான்ஸ் வட அமெரிக்காவில் தனக்குரிய பகுதிகளையெல்லாம் இங்கிலாந்திடம் விட்டுக் கொடுத்ததிலிருந்து தனது பண்பாட்டினை பாதுகாக்க போராடி வருவது. 1774-ஆம் ஆண்டு இங்கிலாந்து பாராளுமன்றத்தில் பிரெஞ்சு சிவில் சட்டமே கியூபெக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும் என்று சட்டம் இயற்றி இன்றுவரை அவ்வாறே இருந்தும் வருகிறது. நெப்போலியன் சட்டங்கள் தான் இன்னும் நடைமுறையில் இருக்கிறதென்றால் அதன் தனித்துவத்தை பார்க்கலாம். மொழியால், கலாச்சாரத்தால் வேறுபட்ட இனம் என்றாலும், கனடாவிலுள்ள ஆங்கிலேயர்களான பெரும்பான்மை மக்களும், சிறுபான்மை பிரெஞ்சு மக்களும் ஐரோப்பிய வெள்ளையர் இனமே.



படிப்பகம்

www.padippakam.com

மக்கள் தொகை கணக்கில், கியூபெக்கில் உள்ள 46 லட்சத்து 50 ஆயிரம் பேர்களில் 82% பிரெஞ்சு மொழி பேசுவோர். அதாவது 37 லட்சத்து 72 ஆயிரம் பேர்கள்.

1931-ல் கனடா சுதந்திரம் பெற்றது. கனடா சுதந்திரம் பெற்றாலும், மத்தியில் மட்டுமே அதிகாரம் குவித்து வைக்கப்படாது, கூட்டரசாக இருக்கிறது. கியூபெக் கனடாவில் தனியரசு கொண்டதும், மாநில அதிகாரங்களை விட கூடுதல் அதிகாரங்களும் கொண்டதாகும். இப்பகுதியின் அதிகாரப் பதவி முதல்வரல்ல; முதல்வரை விட கூடுதல் அதிகாரங்கள் கொண்ட பிரதமர் என்ற பதவியே. இலங்கை போல் ஒரு மையத்தில் அதிகாரம் குவித்து வைக்கப்படாமல் இருப்பதால் பயன் பெருவதாய் இருக்கிறது. இருந்தும் இங்கிலாந்தின் ராணி தான் கனடாவிற்கும் ராணி.

கல்வி, மொழி, கலாச்சார ரீதியாக பிரெஞ்சு மக்கள் சிறுபான்மையினராக இருப்பதால் ஒதுக்கப்படுவதாகவும், மேம்பாட்டுத் திட்டங்கள் சரிவர கொண்டு வரப்படவில்லை என்றும் குறை சொல்லி போராடி வரும் பகுதி. முக்கியமாக, இன்றைய கனடா கூட்டரசின் பிரதமரே கியூபெக்காரர் தான். அவர் ஆங்கிலேயரா அல்லது பிரெஞ்சுக்காரரா என்பது அறியப்பட வேண்டும். இங்கு உரிமைப் போராட்டம் அரசியல் ரீதியாகவே நடக்கிறது.

பொதுவாக, மொழி, மதம் என்ற அளவில் வரும் வேறுபாடு, மனங்களுக்கிடையே பிரிவினையை உண்டாக்கி, அது இனங்களுக்கிடையிலான பிரிவினையாக வளர்ந்து விடுகிறது. இந்தப் பிரிவினையை அடிப்படையாக கொண்டு உண்டாகும் பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனத்தை ஒடுக்கும்போது பிரிவினைக்கான வித்துக்கள் வளர்ந்து வலுப்பெற்று போராட்ட வடிவம் பெறுகின்றன. பெரும்பான்மை இனம் பெரும்பான்மை நாடாளுமன்ற அங்கத்தவர்கள் துணையோடு அரசாங்கம் அமைத்து பெரும்பான்மை ஆதரவோடு சிறுபான்மை இன மக்களை ஒடுக்குகிறது. இங்கு அரசாங்கமே சிறுபான்மை இனத்தை ஒடுக்குவதற்கான பெரும்பான்மை இனத்தின் கருவியாகிறது.

நாடாளுமன்ற ஆட்சி முறையில் பெரும்பான்மை - சிறுபான்மை இனவெறி கணக்கில், பெரும்பான்மை இனமே ஆட்சியில் அமரும் என்பதற்கு ஏற்ப, கனடாவில் ஆங்கில இனத்தின் அரசும், இலங்கையில் பௌத்த சிங்கள அரசும் நிரந்தரமாக வந்துவிடுகின்றன. இதனால், சிறுபான்மை இனம் தங்களது உரிமைகளுக்காக் குடிமக்களில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை விண்ணப்பிக்கிற நிலையிலேயே இருக்க வேண்டியதாகிறது. வேண்டுமானால், ஒருவர் சட்டி ஏந்தினால்,



படிப்பகம்

www.padippakam.com

இன்னொருவர் வெள்ளித்தட்டு ஏந்தலாம். ஆனால், ஏந்துவது என்னவோ மாறாதது. எப்படி ஏந்தினாலும் போடுபவர் போட்டால்தானே? இது உரிமையை பிச்சைபோலவோ அல்லது தானம் போலவோ வாங்கக் கூடிய நிலையில் சிறுபான்மை இனத்தை வைத்து விடுகிறது. பெரும்பான்மை இனத்தை, விரும்பினால் கொடுக்கவும், நினைத்தால் பறிக்கவுமான நிலையில் அதிகார உடமை வர்க்கமாக வைத்து விடுகிறது. எனவே, சிறுபான்மையினரின் உரிமைகளை பெரும்பான்மை இனத்தாரின் விருப்பமே முடிவு செய்யும் நிலை.

செருப்பிற்குக் கூட
இருப்பு நிச்சயம்.
பேரின ஆதிக்க,
ஒற்றையாட்சி நாட்டில்,
சிறுபான்மை இனத்தை விட,
**செருப்பிற்குக் கூட**
**இருப்பு நிச்சயம்!**
**எடுத்துக்காட்டாய்**
**இதோ,**
**இலங்கையில்**
**தமிழர்கள்!**

இனப்பாகுபாடு இல்லாமல் பொது லட்சியத்தின் அடிப்படையில் இனப்பாகுபாடற்ற கொள்கைகளின் அடிப்படையில் இனவாத நாடுகளில் ஒருவர் பிரதமராவது அரிதாகி விடுகிறது.

இந்த நிலையில், ஒரு நாடு அந்த நாட்டு குடிமக்கள் அனைவருக்குமானதாக இருக்கிறதா - இனங்களுக்கான வீடாக இருக்கிறதா என்பது அந்நாட்டு அரசாங்கம் நடந்து கொள்வதைப் பொறுத்தது. வீட்டுக் காவலில் வைக்கப்பட்டவருக்கு சொந்த வீடே சிறை. அதுபோலத்தான், சிறுபான்மை இனங்கள் பெரும்பாலும் உலகம் முழுவதும் பெரும்பான்மை இன ஆதிக்க நாடுகளில் சிறைபட்டுக் கிடக்கின்றன.

## பிரச்சனைகளும் வளர்ச்சிப்போக்கும்

இலங்கையைப் பொறுத்தவரை, தமிழர் நிலங்கள் பறிக்கப்பட்டதும், பெரும்பான்மை இன சிங்களம் மட்டுமே அரசு மொழி ஆக்கப்பட்டதும், மலைநாட்டு தமிழர்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டதும், பின்னர் வெளியேற்றப்பட்டதும், தமிழர்களின் பாரம்பரிய பகுதியான வடக்கு, கிழக்கு பகுதிகளின் தொடர்பை துண்டிக்கும் பொருட்டு



படிப்பகம்

திருகோணமலையில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் நடத்தியதும், கல்வியில் அநீதி, வேலைவாய்ப்பில் அநீதி, பெண்கள் மானபங்கம் படுத்தப்பட்டதும் இலங்கையில் இனப்பிரச்சனை உருவாக காரணங்களாயின. சிங்கள இனம் பெரும்பான்மையாக இருந்ததும், தமிழர்கள் சிறுபான்மையாக இருந்ததும் இந்நிலை உருவாக அடிப்படைக் காரணங்களாயின. இலங்கை தமிழர்களின் உரிமை பறிப்பு நடவடிக்கைகளை சிங்கள பெரும்பான்மை அரசுகள் தவறாமல் செய்து வந்ததையும், அதை நமது நாடான இந்தியா கண்டும் காணாதது போல் இருந்ததையும் சில நேரம் ஓரக்கண்ணால் பார்த்ததையும் நாம் அறிய வேண்டும்.

இலங்கையில் பௌத்த புணருத்தாரண இயக்கம் இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே இருந்து வந்தாலும், ஆங்கிலேயர் ஆட்சி இருந்தவரை பௌத்த சிங்கள பேரினவாத கொள்கைகளை அடைகாத்து வந்தவர்கள் அரசியலமைப்பு சீர்திருத்தவாத குழுக்கள் மத்தியில் தம் கொள்கைகளை நிலைநாட்ட முடியாது இருந்தனர். ஆனால், 1936-ல் தனிச்சிங்கள அமைச்சரவை சட்டசபைக்கு தெரிவானதும் மீண்டும் பௌத்த தேசிய வாதம் தலைதூக்கியது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பாண்டாரநாயக்காவின் தலைமையில் செயல்பட்ட சிங்கள மகாஜன சபை சிங்கள இனவாதத்தை வலியுறுத்தும் இயக்கமாக செயல்பட்டது. அதன் மூலம் ஒருமைப்பாட்டிற்கு கருத்து ரீதியான வேட்டுவைக்கும் திருப்பணியை ஆரம்பத்திலேயே பண்டார நாயக்கா செய்து வந்தார்.

அரசியல் அதிகாரத்தை பிடிக்க விரும்பிய தேசியவாத குழுக்கள், சமவெளிப் பகுதிகளில் குடியேற்றம் நடத்துவதாக வாக்குறுதி தந்திருந்தனர். அதிகாரத்தைக் குறிவைத்து இனவெறியூட்டி பிரிவினை உணர்வை பெரும்பான்மை மக்களிடம் விதைத்த இவர்களது செயல்கள்தான், பின்னர் அரசை பிடித்து கொண்டு தமிழர் பகுதிகளில் குடியேற்றம் என்னும் பெயரில் நிலக்கொள்ளை நடத்தவும், தமிழர்களை தனி இனம் என்ற அடையாளங்களை அழிக்க முயற்சிக்கவும் காரணமாயின.

*அட்டவனை : 2. (பக்கம்-6)*

1948-ஆம் ஆண்டு கிடைத்த இலங்கை சுதந்திரம் சிங்களருக்கு ஆட்சி அதிகாரமாகவும், தமிழருக்கு தங்களை சிங்களவரிடம் அடிமைப்படுத்திவிட்ட சாசனமாகவும் அமைந்தது. அதிகாரம் கைக்கு வந்ததும் தமிழருக்கு எதிரான செயல்கள் சிங்களவர்களின் அரசுகளால் விரைந்து நடத்தப்பட்டன.

இந்திய வம்சாவழியினர் என்று சொல்லி தமிழர்களில் ஒரு பெரும் கூட்டத்தாருக்கு பொருளாதார, சமுதாய, ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு, ஓட்டுரிமை பறிக்கப்பட்டு, இறுதியாய் அந்நியர் என்று

www.padippakam.com

அட்டவணை-2. திருகோணமலை மாவட்டம்
(5-ஆம் பக்கம் தொடர்ச்சி) மக்கள் தொகை விழுக்காடு : 1827-1981

| வருடம் | தமிழர் % | இஸ்லாமிய தமிழர் % | சிங்களவர் % | ஆட்சி | விளைவு |
|---|---|---|---|---|---|
| 1827 | 81.8 | 16.9 | 1.3 | ஆங்கிலேயர் ஆட்சி | தமிழர், மொழி, நில உரிமை பறிப்பு இல்லை. |
| 1881 | 64.8 | 25.9 | 4.2 | | |
| 1891 | 66.4 | 25.0 | 4.3 | | |
| 1901 | 60.0 | 29.0 | 4.2 | | |
| 1911 | 57.9 | 32.6 | 3.8 | | |
| 1921 | 54.5 | 37.7 | 4.4 | | |
| 1946 | 44.5 | 30.6 | 15.3 | (1931-1948) ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் சிங்கள நாடாளுமன்ற ஆட்சி | சிங்கள அரசியல் கட்சிகள் தோற்றம், தமிழின நிலம் பறிப்பு, குடியேற்றம், உரிமை மறுப்பு தொடக்கம். |
| 1953 | 44.7 | 34.1 | 18.2 | சுதந்திர சிங்கள ஆட்சி | நாடாளுமன்ற பெரும்பான்மை சிங்களவரின் அடாவடித்தனம் தமிழின நிலக்கொள்ளை, மொழி உரிமை மறுப்பு, கல்வி, வேலைவாய்ப்புகளில் துரோகம், தோட்டத் தமிழர் உரிமை பறிப்பு, பல அட்டூழியங்கள். |
| 1963 | 39.1 | 30.8 | 29.6 | | |
| 1971 | 38.1 | 31.8 | 29.1 | | |
| 1981 | 36.4 | 29.0 | 33.6 | | |

நாடு கடத்தப்பட்டனர். நமது நாடாம் இந்தியா அந்த கடத்தலையும் ஏற்றுக் கொண்டு தமிழர்களை இறக்குமதி செய்தது.

சிறிமா பண்டார நாயக்கா - லால் பகதூர் சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் 4 லட்சத்து 60 ஆயிரம் இந்திய வம்சாவழி தமிழர்களை அந்நியர் என்று நாடு கடத்தியது இலங்கை அரசு. அவர்களை பண்ட இறக்குமதி போல பாதிக்கப்பட்ட தோட்டத் தமிழரையோ, தமிழ் நாட்டுத் தமிழர்களையோ, ஈழத் தமிழர்களையோ, இவர்களின் பிரதிநிதிகளையோ கலந்தாலோசிக்காமல் அழைத்துக் கொள்வது என்ற பெயரால் அன்றைய இந்திய அரசாங்கம் கடத்திக் கொண்டு வந்து இலங்கையில் சிறுபான்மை தமிழினம் மேலும் சிறுபான்மை ஆகிட, பிரச்சனை கோர வடிவம் பெற துணை போன துரோகச் செயலைச் செய்தது.

சிங்களர்கள் தங்களது அதிகாரத்தால், ஆதிகால வேடர் என்ற தமிழர்களை சிங்களவர்களாக கணக்கில் காட்டி தங்களது எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டனர். அந்நிய ஆட்சிக்கு எதிராக முன்னின்று உழைத்து சிங்களவருக்கு பல நன்மைகளைத் தேடித் தந்தவரான பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் தம்பியும்,



படிப்பகம்

www.padippakam.com

இலங்கை தேசிய காங்கிரஸை தொடங்கி அதன் முதலாவது தலைவராகவும் இருந்த பொன்னம்பலம் அருணாசலம் அவர்களை தேர்தலில் தலைநகரில் நிற்க வேண்டாம் என்றும், நீங்கள் வடக்கே சென்று நில்லுங்கள் என்றும் உடனிருந்த சிங்கள தலைவர்களே தமிழர் என்று பாகுபடுத்தி தேசிய தலைவருக்கே இன் முத்திரை குத்தி, ஒதுக்கி, இன வெறியைக் காட்டிக்கொண்டனர். அதனால் அவர் இறுதியாக அந்த இயக்கத்தை விட்டே வெளியேறி தமிழர் சீர்திருத்தக் கழகத்தை நிறுவ வேண்டியதானது.

அட்டவணை -3

கிழக்கு மாகாணம் மக்கள் தொகை விழுக்காடு (1827-1981)

| வருடம் | சிங்களர் % | தமிழர் % | இஸ்லாமிய தமிழர் % | ஆட்சி | விளைவு |
|---|---|---|---|---|---|
| 1827 | 1.3 | 75.65 | 23.55 | ஆங்கிலேயர் ஆட்சி | தமிழர், மொழி, நில, உரிமை பறிப்பு இல்லை. |
| 1881 | 4.5 | 61.35 | 30.65 | | |
| 1891 | 4.75 | 61.55 | 30.75 | | |
| 1901 | 4.7 | 57.5 | 33.15 | | |
| 1911 | 3.75 | 56.2 | 36.0 | | |
| 1921 | 4.5 | 53.5 | 39.4 | | |
| 1946 | 8.4 | 52.3 | 39.1 | (1931-1948) ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் சிங்கள நாடாளுமன்ற ஆட்சி | சிங்கள அரசியல் கட்சிகள் தோற்றம், தமிழின நிலம் பறிப்பு, குடியேற்றம், உரிமை மறுப்பு, தொடக்கம், |
| 1953 | 13.1 | 47.3 | 38.1 | சுதந்திர சிங்கள ஆட்சி | தமிழர் அடிமையாதல், தமிழின நில பறிப்பு, மொழி உரிமை மறுப்பு, கல்வி, வேலைவாய்ப்புகளில் துரோகம், தோட்டத் தமிழர் உரிமை பறிப்பு, பல அட்டூழியங்கள். |
| 1963 | 20.1 | 45.1 | 34.0 | | |
| 1971 | 20.7 | 43.9 | 34.6 | | |
| 1981 | 24.9 | 41.9 | 32.2 | | |


தமிழர்களை அவர்களது ஊர்களை விட்டே வெளியேற்றி விரட்டியடித்து, சிங்கள குடியேற்றம் நடத்தி ஆக்கிரமித்து சுமார் 2 ஆயிரம் சதுர மைல்கள் பகுதியைப் பறித்துக் கொண்டது சிங்கள அரசு. தமிழர் பகுதியில் நடந்த குடியேற்றத்திட்டத்தை தடுக்கும் பொருட்டு பண்டார நாயக்கா (சந்திரிகாவின் தந்தை) -செல்வநாயகம் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு, சிங்கள இனவாத இயக்கத்தவர்களும், பௌத்த பிக்குகளும் கடுமையாக எதிர்த்ததால் ஒப்பந்தம் ஏட்டுச் சுரைக்காயானது. அதன்பிறகு குடியேற்றத்திட்டங்கள் சிங்கள குற்றவாளிகள், ராணுவத்தினர், காவல் துறையினர் உதவியோடு தீவிரப்படுத்தப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

**வரைபடம் :** இலங்கையில் தமிழர் மரபுவழித் தாயகத்தில் சிங்களக் குடியேற்றம்.





படிப்பகம்

www.padippakam.com

1950-ஆம் ஆண்டு தேர்தல் பதிவேடுகளிலிருந்து இந்திய வம்சாவழி தமிழர்கள் நீக்கப்பட்டதையடுத்து, இலங்கை இந்திய காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களும், தொண்டர்களும் உண்ணாவிரதம் இருந்து சத்தியாகிரகம் நடத்தினர்.

1952-ஆம் ஆண்டு அரசாங்கம் மொழியைப் பொறுத்த அளவில் பாரபட்சமாக நடந்து கொள்கிறது என்று வவுனியா பாராளுமன்ற பிரதிநிதி சி. சுந்தரலிங்கம் அவர்கள் தன் பதவியை ராஜினாமா செய்தார்.

1956-ல் அரசாங்கத்திலிருந்து தமிழ் அங்கத்தவர்கள் தம் மொழிக்கும், கலாச்சாரத்திற்கும் ஏற்பட்டு வரும் ஆபத்தைச் சுட்டிக்காட்டி, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தம் பதவிகளிலிருந்து வெளியேறினார்கள்.

1956-ஆம் ஆண்டு, ஆனி மாதம், 5-ஆம் தேதி சிங்களம் மட்டுமே அரச கரும மொழி என்னும் மசோதாவை சிங்கள இனவெறி ஆதிக்க அடிப்படையில், ஒடுக்குமுறை கண்ணோட்டத்தாலும், தமிழருக்கான உரிமை மறுப்பின் வெளிப்பாடாகவும் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இதை எதிர்த்து 12 தமிழர் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 200 தமிழ்த் தொண்டர்கள் காலிமுகத் திடலில் அமைதியாக சத்தியாகிரகம் செய்தபோது போலீசார் முன்னிலையில், பௌத்த பிக்குகளின் ஆதரவோடு சிங்கள வெறிக்கூட்டம் அவர்களை கடுமையாக தாக்கியது. இதை அடுத்து பரவிய கலவரத்தில் 150-க்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களே.

1958-ஆம் ஆண்டு அரசு வாகனங்கள் சிங்கள பேரினவாத அரசின் உத்திரவுப்படி சிங்கள ஸ்ரீ எழுத்தை தாக்கியவாறு வருவதை எதிர்த்து தமிழர்கள் நடத்திய போராட்டத்தில் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தி இரண்டு தோட்டத் தொழிலாளர்களை கொன்றனர். கொல்லப்பட்ட இருவரின் இறுதிச் சடங்கில் 80 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் கலந்து கொண்டதும், அதற்கு அனுதாபம் தெரிவித்து வடக்கிலும், கிழக்கிலும் முழு அடைப்பு நடத்தியதும் தமிழர்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பை சிங்கள அரசிற்கு எடுத்துக்காட்டுவதாக இருந்தது.

தமிழர்கள் தங்களுக்கு எதிரான அநீதிகளுக்கு எதிராக பாராளுமன்ற பதவிகளை துறத்தல், சத்தியாகிரகம் செய்தல் முதலிய அமைதி வழிப் போராட்டங்களை செய்தபோது, பதில் நடவடிக்கைகள் சித்திரவதை, கொலை, தீ வைப்பு, கற்பழிப்பு, கைது என்று அட்டூழியங்களாகவே இருந்தன. *இது தான் தமிழர்களும் ஆயுதம் ஏந்தும் கட்டாயத்திற்கு தள்ளியது.*



படிப்பகம்

www.padippakam.com

**அட்டவணை - 4 :** *அரசு சேவையில் தமிழர் விழுக்காடு*

| | 1956 % | 1965 % | 1970 % | |
|---|---|---|---|---|
| 1. நிர்வாகத் துறை | 30 | 20 | 5 | |
| 2. எழுது வினைஞர் (தபால், புகையிரத மருத்துவ, சுங்க இலாக்காக்கள்) | 50 | 30 | 5 | தமிழர்களை களை-யெடுத்தல் & திட்டமிட்ட ஆக்கிரமிப்பு |
| 3. தொழில் நுணுக்கத்துறை (மருத்துவர், பொறியாளர், விரிவுரையாளர்) | 60 | 30 | 10 | |
| 4. ஆயுதப் படையினர் | 40 | 30 | 1 | |
| 5. தொழிலாளர் பிரிவினர் | 40 | 20 | 5 | |

1956-ல் நிர்வாகத்துறையில் 30% இருந்த தமிழர்கள் 1970-ல் 5% ஆக குறைக்கப்பட்டதும், 1956-ல் உயர் தொழில் நுட்பப் பிரிவில் 60% ஆக இருந்த தமிழர்களை 1970-ல் 10% ஆக ஆக்கியதும், தமிழர்கள் வேலைவாய்ப்பில் வஞ்சிக்கப்பட்டதற்கான வரலாற்று ஆதாரங்கள்.

1974-ல் யாழ்ப்பாணத்தில் நடந்த 4-வது உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் காவல்துறையினர் தாக்குதல் நடத்தியது.

1981-ல் யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டது. இப்படி தமிழருக்கு எதிரான அட்டூழியங்கள் அதிகரித்துக் கொண்டே போயின.

சிங்களவரான பேராசிரியர் சீ.ஆர்.டி. சில்வா அவர்களே, "சிறுபான்மை மக்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதனால் நேரிட்ட பாதிப்பு பாரதூரமானது. பாடசாலைகள் அரசாங்க மயமாக்கப்பட்டதால் எழுந்த போராட்ட காலத்தைப் போலல்லாது சிங்கள தமிழ் மக்களிடையே இதனால் உருவாகிய பகையும், நம்பிக்கையின்மையும் இலகுகளில் நீக்கக்கூடியன அல்ல.... சிங்கள தமிழ் மக்களை உள்ளடக்கிய கிறிஸ்துவ மதத்தினரைப் போலல்லாது, இலங்கை வாழ் தமிழர்கள் தமக்கென உரிய தேசிய உணர்வுகளை வளர்த்துக் கொண்டார்கள். கல்வித்துறையில் வாய்ப்புகள் எட்டாமல் போனது, மொழி, வேலைவாய்ப்பு இன்மை முதலிய விடயங்களால் ஏற்கனவே உருவாகிய முரண்பாட்டை இன்னும் தீவிரப் படுத்தவதாக இருந்தது. இருந்தும் பல்கலைக் கழக அனுமதிப் பிரச்சனையே யாழ்ப்பாண இளைஞர்களை ஒன்றுபடுத்தியதென்பதும், தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர்களை தனி நாடு கோரத் தூண்டியதென்பதும் தெளிவு" என்று விளக்குகிறார்.

"ஐக்கிய இலங்கையில் சிங்களவருக்கு சமமாக நின்று எமது அரசியல் உரிமைகளை பெறலாம் எனக் கடந்த 25 வருடங்களாக முயற்சி செய்தோம். ஆனால், அடுத்தடுத்து வந்துள்ள சிங்கள அரசாங்கங்கள் சுதந்திரத்தினின்றும் எழும் அதிகாரத்தைக் கொண்டே எமது அடிப்படை உரிமைகளை மறுத்து அடிமைப்படுத்திய மக்களாக்கிவிட்டன என்பது வருந்துவதற்குரியதாகின்றது. ஆகவே, இத்தேர்தல் வாயிலாக தமிழ் ஈழம்



படிப்பகம்

www.padippakam.com

விடுதலை அடைய வேண்டும் என்பதே மக்கள் தந்துள்ள தீர்ப்பு என நான் கருதிக் கொள்வதை எனது மக்களுக்கும், நாட்டுக்கும் அறிய தருகிறேன். தமிழர் விடுதலை முன்னணி சார்பில் மக்கள் இட்ட ஆணையை நிறைவேற்றுவோம் என உறுதியளிக்கிறேன்" என்று ஈழத் தந்தை செல்வநாயகம் அவர்கள் 1975-ல் குறிப்பிட்டது இலங்கை நாட்டுச் சுதந்திரம் ஈழ நாட்டுக்கும், மொத்தத் தமிழருக்கும் அடிமை வாழ்வாகிப் போனதற்கு ஆதாரமல்லவா ?

1976-ல் இலங்கை தமிழர், இந்திய வம்சாவழி இலங்கை தமிழர், தமிழ் பேசும் முஸ்லிம்கள் எல்லோரும் முதன்முறையாக வட்டக்கோட்டையில் ஒன்று கூடியபோது தமிழர் ஐக்கிய முன்னணி தலைவர்கள் அதனை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாக விடுதலையை வலியுறுத்தும் பொருட்டு அறிவித்தனர். அடுத்து, போராட்டம் அமைதி வழியிலிருந்து ஆயுத வழிக்கு மாறும் கட்டாயம் வந்துவிட்டது.

வெறுங்கையில் வீரம்பேசி லாவமில்லை
இழந்த உரிமையும், சொந்த மண்ணும் மீளவில்லை

கோரி கோரி மனுப்போட்டும், போனது குப்பைக்கே!
பாராளுமன்றத்தில் போராடிக்கேட்டும் புறக்கணிப்பு;
ஊர்வலம், கூட்டம் என்றால் சிறை; வதை;
கொலை, கொள்ளை எல்லாம் பார்த்து
இளந்தமிழர்கள் கூடி முடிவெடுத்து
தோல்களில் துப்பாக்கி ஏற்றி பதிலளித்தார்!

வெடித்து சிதறும் வெடிகுண்டும்
தானும் வெடித்து சிதறும் வெடிகுண்டாய்
வெடித்தது என்னவோ பதிலடிக்கு.
ஆம். உரிமை வாழ்வாம் விடுதலைக்கு!

1983-ல் தமிழருக்கெதிரான அட்டூழியங்கள் மிகவும் கடுமையாயின. இதன் எதிரொலியாக தமிழகத்தில் மக்கள் கொதித்தெழும் நிலை ஏற்பட்டது. 1983-லிருந்து 1987 வரை இந்தியா நடுவராக நின்று அனைத்துக் கட்சி பேச்சுவார்த்தை, திம்பு பேச்சுவார்த்தை, அரசியல் கட்சி மாநாடு, கொழும்பு-டில்லி-பெங்களூர் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சனைக்கு தீர்வுகாண முயற்சித்தது.

இதையடுத்து இந்திய-இலங்கை ஒப்பந்தம் 1987-ல் உருவாக்கப்பட்டதும், தமிழர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதாய் இல்லாதிருந்தும் இரு அரசாங்கங்களுமே செய்து கொண்டதும், அதையும் நடைமுறைப்படுத்துவதில் நியாயமற்ற முறையில் குமரப்பா, புலேந்திரன் என்னும் புலித் தளபதிகள் உள்ளிட்ட 13 போராளிகளை இலங்கை ராணுவம் கடத்திச் செல்ல இந்திய அரசாங்கம் உடந்தையாக இருந்ததும்,



படிப்பகம்

www.padippakam.com

திலீபன் உண்ணாவிரதம் இருந்து மரணிக்க விட்டதும், அதனால் இந்திய அமைதி காக்கும் படைக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மோதல் உண்டாகி இரு தரப்பிலும் ஏராளமானவர்கள் சாக நேரிட்டதும், பிரேமதாஸா - விடுதலைப்புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்ததும், முறிந்ததும், அடுத்து சந்திரிகா குமாரதுங்கா குடியரசு தலைவரான பின்னர் பேச்சுவார்த்தை நடந்து முறிந்ததும் நிகழ்ந்தன.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொல்லப்பட்டதும், பிரேமதாஸா, விஜயரத்தினா, அதுலத்முதலி, காமினிகிஸநாயகா முதலிய சிங்கள அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டதும், அப்பாபிள்ளை அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்ற தமிழர் அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டதும், டெலோ தங்கதுரை, குட்டிமணி, சபாரத்தினம், ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி தலைவர் பத்மனாபா, பிளாட் தலைவர் உமாமகேஸ்வரன் போன்ற போராளி இயக்கங்களின் தலைவர்கள் கொல்லப்பட்டதும் நடந்தேறின.

அண்மையில், சந்திரிகா குமார ரணதுங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் பேச்சுவார்த்தை நடந்து முறிந்துவிட்டதும், அதை அடுத்து ராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆயுத மோதல்கள் உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதுமாக இலங்கையில் ஈழக்களம் இருக்கிறது. ஈழக்களத்தில் புலிகள் ஆயுதமேந்தி நிற்கின்றனர்.

சூரிய வெளிச்சம் என்ற பெயரில் ராணுவம் யாழ்ப்பாணத்தை தாக்க புலிகள் பதிலடி கொடுக்க கிட்டதட்ட 5 லட்சம் தமிழர்கள் அகதிகளாகிவிட்டனர். அகதிகளாய் கூட வர வழியின்றி இந்தியா தடுக்க, இலங்கை நாட்டு ராணுவம் தாக்க தவியாய் தவிக்கும் ஈழ நாட்டு தமிழருக்கு விடிவது எப்போது?

கியூபெக்கைப் பொறுத்தவரை, குடியேற்றம் இருந்தாலும், அது திட்டமிட்ட குடியேற்றமாக இல்லாமல் இருந்தால் பெரிய அளவில் பாதிக்காது. அடுத்து கனடா மிகப்பெரிய நாடு என்பதால், பரந்துபட்ட நிலப்பரப்பு இருப்பதால் குடியேற்றம் கடுமையாக பாதிக்காது. மேம்பாட்டுத் திட்டங்கள் என்ற அளவில் எடுத்துக்கொண்டாலும், மத்திய அரசு பாரபட்சம் காட்டுகிறது என்றாலும், ஒட்டுமுறை பாதை இருப்பதாலும், மாநிலத்தை விட கூடுதல் அதிகாரம் கொண்ட அரசு இருப்பதாலும் குறிப்பிடத்தக்க மேம்பாடு பெறமுடியும். அத்துடன் கியூபெக்கிற்கு தனி மாநில அரசு இருப்பதால் பிரச்சனை தீவிரமான பாதிப்பை உண்டாக்குவதாக இருக்காது. ஆனால், கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும், மொழியையும் காப்பதில் அக்கறை அதிகம் கொண்டவர்களாக பிரெஞ்சுக்காரர்கள் இருக்கும்போது அதனடிப்படையிலான முரண்பாடுகளே பிரச்சனைகளாகும். இன்று வரையில் நெப்போலியனின் பிரெஞ்சு சிவில் சட்டமே கியூபெக்கில் இருக்கிறது என்றால், அதை இங்கிலாந்து சட்டம் போட்டு ஏற்றுக் கொண்டது என்றால், அதை அடக்கு முறையில் கோரவடிவெடுத்த இலங்கை அரசோடு ஒப்பிடுவது பொருந்தாது.



படிப்பகம்

www.padippakam.com

கியூபெக்கைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட 35 ஆண்டுகளாக தனி நாடு கோருவோ இயக்கம் இருந்து வருகிறது . 1960-களின் தொடக்கத்தில் கியூபெக் தனி நாடு கோருவோர் புரட்சி செய்தனர். அதன் பிறகுதான் புரட்சி மொழிக்கு தான் மரியாதை என்பது போல் அவ்வியக்கத்திற்கு உரிய மரியாதை கிட்டியது.

1970-ஆம் ஆண்டு சுதந்திரம் கேட்போர் இங்கிலாந்து வர்த்தக கமிஷனர் ஜேம்ஸ் இராசையும், கியூபெக் தொழிலாளர் நல மந்திரி பியர்ரே லாபோர்ட்டையும் கடத்திச் சென்றுவிட்டனர்.

அப்போதைய கனடா கூட்டரசின் பிரதமர் பியர்ரே ட்ரூடே போர்க்கால சட்டத்தை பிறப்பித்தும் கியூபெக்கின் மாண்ரீல், கியூபெக் சிட்டி தெருக்களில் ராணுவ டாங்குகளுடன் ராணுவம் ரோந்து சென்றும் கடத்தப்பட்டவர்களை மீட்க முடியவில்லை. மந்திரி லாபோர்டே கொல்லப்பட்டார்; இங்கிலாந்து அதிகாரி மட்டும் விடுதலை செய்யப்பட்டார்.

1976-ல் கியூபெக் கோய்ஸ் கட்சி சுதந்திர கோரிக்கையை முன்வைத்து வெற்றி பெற்றது போராட்டத்தின் பாதையில் ஏற்பட்ட திருப்பமாகும்.

1980-ல் கியூபெக்கிற்கு சுதந்திரம் வேண்டுமா, வேண்டாமா என்ற வாக்கெடுப்பில் 40% வாக்குகளே பிரிவினை கோருவோருக்கு கிட்டியது. இருந்தாலும், ஒற்றுமையா பிரிவினையா என்பதை மக்களே தீர்மானிக்கும் வழி திறந்துவிடப்பட்டதால், அதிலேயே ஒற்றுமை பேசுவோரும் பிரிவினை கேட்போரும் பயணிக்க வேண்டியதாய் இருக்கிறது.

ஆனால், இலங்கையின் ஈழத்தில் உரிமைப் போராட்டம் அமைதியாக நடந்தாலும் அடக்குமுறை; ஆயுதப் போராட்டம் என்றாலும் அடக்குமுறை.

இன்றைய நிலையில், கியூபெக்கில் 1.11.1995-ல் நடந்த வாக்கெடுப்பில் பிரிவினைக்கு ஆதரவு 49.63%; எதிர்த்து வாக்களித்தது 50.37%. கியூபெக் பிரெஞ்சுக்காரக்களில் 60% பேர்கள்தான் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்தனர். (ஈழத்தில் இப்படி நடந்திருந்தால் பிரிவினைக்கு ஆதரவு எவ்வளவு இருந்திருக்கும் என்று எண்ணிப்பார்க்கவும்) ஆனால், கியூபெக் ஆங்கிலேயர்களில் 90 சதவீதம் பேர்கள் பிரிவினையை எதிர்த்து வாக்களித்தனர். கியூபெக்கில் சிறுபான்மையாக ஆங்கிலேயர்கள் இருப்பதால் அக்கறையுடன் 90%-ம் மக்கள் வாக்களித்தனர் போலும். கியூபெக் பிரெஞ்சுக்காரக்களில் 40%-ம் மக்கள் பிரிவினையை எதிர்த்து வாக்களித்திருக்கலாம் அல்லது வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் விட்டிருக்கலாம். எது எப்படியாயினும் 40% கியூபெக் பிரெஞ்சுக்காரர்கள் தனி நாடு கோருவாரின் பிரச்சாரத்திற்கு உரியவர்களாகவும், மனமாற்றம் செய்யப்பட வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே, 0.74%-ல் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒற்றுமை 40% பிரெஞ்சுக்காரர்களின் வாக்கு சுத்தி எதிராக நீளாதவரை நீடிக்கும். ஆதரவளிக்காது இருக்கும் 40%



படிப்பகம்

www.padippakam.com

கியூபெக் பிரெஞ்சுக்காரர்கள் பிரிவினைக்கு எதிராக வாக்களிக்க முடிவு செய்தால், பிரிவினையை எதிர்த்து வாக்களிக்காதிருக்கும் 10% ஆங்கிலேயர்களால் பிரிவினையை தடுத்திட முடியாது. ஆனால், கனடா கூட்டரசு மேலும் பல சலுகைகளை வழங்கி அல்லது நியாயமான உரிமைகளை வழங்கி - கனடா கூட்டரசின் பிரதமர் கூறியுள்ளதுபோல் - பிரெஞ்சு மக்களிடம் ஆதரவு திரட்டி ஒற்றுமையை நிலை நாட்ட முடியும். எது எப்படியோ, பிரிந்து செல்ல விரும்புவோருக்கு கூடுதல் ஆதரவு கிடைத்திருக்கிறது. 1980-ல் 40%-மாக இருந்த ஆதரவு 1995-ல் 49.63%-மாக கூடியிருக்கிறது.

ஆனால், மேலே குறிப்பிட்ட நாளிலேயே யாழ்ப்பாணத்தின் மீது இலங்கை ராணுவம் கொடூரமான தாக்குதல் நடத்த, ஏராளமான தமிழர்கள் கொல்லப்பட்டதும், சொந்த வீடு, சொந்த உடமை இழந்து, சொந்தங்களைப் பிரிந்து, உயிரைக் காப்பாற்றிக்கொள்ள குழந்தைகளோடு இன்ன இடம் சொந்தம் என்று தெரியாத நிலையில் அகதிகளாய் கிட்டதட்ட 5 லட்சம் தமிழர்கள் ஓடக்கூடிய அவலத்தைப் பத்திரிக்கைகள் வெளிச்சம் போட்டு காட்டுகின்றன.

தமிழா! இலங்கையில் தமிழருக்கு உண்ண உணவில்லை, இருக்க இடமில்லை, பிணிக்கு மருந்தில்லை, இன்ன இடம் சொந்தமென்று தெரியாமல் லட்சம் லட்சமாய் ஓடுகின்றனர். யாழ்ப்பாணம் பிணக்காடாகிறது. தன் வீடு, தன் பிள்ளை, தன் மனைவி, தன் தாய், தன் தந்தை இவர்களுக்கெல்லாம் பாதிப்பு வரும்போது வலுவான வாலிபர்கள் ஆயுதமேந்த வேண்டிய கட்டாயம் வந்துவிடுகிறது. மானமறவனாய் கிளம்புவதா? அல்லது அகதியாய் ஓடி விடுவதா? என்ற நிலை. அதனால்தான் களம் காணும் கட்டாயம் வந்துவிட்டது. அப்பாவி தமிழர், நிலைமையின் நெருக்கடியால் போராளியானோர் எல்லோருமே விடுதலை புலிகள் என்று முத்திரை குத்தப்பட்டு சுட்டுத் தள்ளப்படுகின்றனர். விடுதலைப்புலிகளின் தலைமையின் சில முடிவுகளில் ஏற்பட்ட ஊனங்களால் அதன் வெற்றிப் பாதையில் களங்கங்களும், முட்டுக் கட்டைகளும் தலைசுமைப் போல வந்துவிட்டன.

ஒருபுறம் கனடா கூட்டரசின் பிரதமர் ஒற்றுமைக்காக பேரணிகளை நடத்துகிறார்; சலுகைகளை அறிவிக்கிறார்.

மறுபுறம் கியூபெக்கை பிரித்தெடுக்கும் கொள்கை பிரெஞ்சு மொழி பேசாதவர்களால் குலைக்கப்பட்டுவிட்டது, தோல்விக்குப் பொறுப்பு ஏற்கிறேன். எனக்குப் பின்னர் வருபவர்கள் கியூபெக் சுதந்திரத்திற்கு முழு வடிவம் கொடுப்பார்கள் என்று சொல்லி பதவியை துறக்கிறார் கியூபெக்கின் பிரதமர் - ஜாக்குவிஸ் பரிசியா.

தேர்தல் முடிவுக்குப் பின்னர், கியூபெக் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை காப்பாற்றுவேன். இம்மாகாண மக்களுக்கு மேலும் பல சலுகைகள் கிடைக்கும் என்கிறார் கனடா கூட்டரசின் பிரதமர்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த முடிவுகளால் உள்ளம் தளர்ந்துவிட வேண்டாம், அடுத்தமுறை உறுதியாக வெற்றிபெறுவோம் என்று தமது ஆதரவாளர்களுக்கு நம்பிக்கையூட்டுகிறார் பிரிவினை கோரும் இயக்கத்தின் தலைவரான லூசியன் புச்சர்டு.

இலங்கையை ஆண்டவர்கள் தந்த வாக்குறுதிகளும், போட்ட ஒப்பந்தங்களும் நம்ம ஊர் கண்துடைப்பு விசாரணை குழுக்களைப் போலவே காலாவதியாகி போனதைத் தவிர வேறொன்றும் சாதித்துவிடவில்லை.

கனடா கூட்டரசின் பிரதமர், "கியூபெக் மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு விட்டோம்; உண்மையான மாற்றத்திற்கான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்படும்" என்று கூறியுள்ளது அவரது சனநாயக வழிப்பட்ட அறிவு முதிர்ச்சியை காட்டுகிறது.

ஆனால், இலங்கையில் 5 லட்சம் தமிழர்கள் அகதிகளாக ஓடி பட்டினியாலும், பிணியாலும் வாடுகிறார்கள்; உதவுங்கள் சந்திரிகா அவர்களே என்று கேட்ட யாழ் மாவட்ட அரசாங்க அதிகாரி பதவியிலிருந்து ஒதுக்கி வைக்கப்படுகிறார்.

ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் புட்ரோஸ் காலி அவர்களும், இலங்கையிலுள்ள 10 தமிழர் இயக்கங்களும், ஆசிய மனித உரிமைக் கழகத் தலைவர் வி.ஆர். கிருஷ்ண அய்யர் அவர்களும் போரை நிறுத்தக் கோரியும் நிறுத்த மறுத்துவிட்டது இலங்கை அரசு.

எது எப்படியோ, பிரச்சனையைத் தீர்க்க கனடாவின் கியூபெக்கில் ஓட்டுமுறை பாதை; இலங்கையின் ஈழத்தில் வேட்டுமுறை கொலை வெறிப்பாதை. கியூபெக்கில் மக்களின் உடமைக்கும், உயிருக்கும் சேதாரமில்லை. ஆனால், ஈழத்திலும், மொத்த இலங்கையிலும் தமிழரின் உடமைக்கும், உயிருக்கும் நிரந்தரமில்லை. கியூபெக்கில் வாக்கெடுப்பு முடிந்து அவரவர் அமைதியாக அடுத்ததை எண்ணி. இலங்கையில் ராணுவக் கொடுமைக்கு அஞ்சி தமிழர்கள் அகதிகளாக. கியூபெக்கில் உரிமைப்போராட்டம் வேட்டுமுறையை தொட்டுவிட்டு, ஓட்டுமுறைக்கு தடம் மாறி இருக்கிறது. இலங்கையில் வேட்டுமுறை வலுப்பெற்றிருக்கிறது.

கனடாவில் கூட்டாட்சி; இலங்கையில் மையத்தில் மட்டும் அதிகாரம் குவிந்த காட்டாட்சி. கியூபெக்கிற்கு தனி மாநிலத்தை விட கூடுதல் உரிமை; ஈழத்திற்கு தனி மாநில உரிமை கூட இல்லாத கொடுமை. கனடாவில் மக்களே முக்கியம், ஒற்றுமையைவிட. இலங்கையில் ஒற்றுமையைவிட, மக்களை விட ஒடுக்குமுறை அட்டூழியமே முக்கியம். அது மக்களாட்சி நாடு. இது மக்களாட்சி பேரால் நடக்கும் குடிமக்கள் விரோத நாடு. அது அமைதியான பூக்காடு; இது அடாவடித்தனம் கொண்ட சிங்கள ராணுவத்தால் ரத்தச் சேற்றில் தமிழ் மக்கள்



படிப்பகம்

www.padippakam.com

கொல்லப்படுவதும், போராளிகளின் பதிலடியால் சிங்கள அடாவடிக்கும்பல் மடிக்கப்படுவதுமான பிணக்காடு; அதனால் இலங்கை சுடுகாடு.

கனடாவின் கியூபெக்கில் விடுதலை கோருவோர் பெரும்பாலும் ஒன்றுபட்டு நிற்கும் நிலை. ஆனால், ஈழத்தமிழர் உரிமைப் போராட்ட இயக்கங்கள் பிளவுபட்டு நிற்கும் அவலம். போராளி இயக்கங்கள் மீது விடுதலைப்புலிகளின் இயக்கம் துரோக முத்திரை குத்தி போராளி தலைவர்களான சபாரத்தினம், பத்மனாபா, உமாமகேஸ்வரன் போன்றவர்களை கொன்றதனால் அந்த போராளி இயக்கங்களின் விரோத போக்கு; இதனால் தமிழர் ஒற்றுமையாக நின்று எதிர்ப்பது இல்லாமல் போனது கடுமையான பின்னடைவே.

கனடாவில் ஒட்டுமுறைப் பாதை என்பதால் அந்நியர் தலையிட வேண்டிய தேவையே இருக்கவில்லை. ஆனால், இங்கு மூன்றாவது நபராக, நடுவராக வேறு நாடுகளோ, ஐ.நா.வோ தலையிட வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால், விடுதலைப் புலிகளின் அரசியல் உத்திகள் எந்த அளவுக்கு பிரச்சனையை தீர்த்திட வழிவகுக்கும் என்று வருங்கால நடவடிக்கைகளே வெளிப்படுத்த வேண்டும்.

## பிரான்ஸும், தமிழ் நாடும்

(இனவழிச் சொந்தங்களின் பக்கபலம்)

தமிழர் ரத்தம்
ஈழத்து மண்ணில்
சிதறி பாய்கிறது
தமிழ்மான மனங்கள்
உயிரிழந்து, பிணங்களாக...
துயரம், மனங்களில் ஆறாக...
அச்சம், மனங்களில் இடியாக...
ரத்தமும் கண்ணீரும்
மொத்தமாய் சிந்த
ஈழநாடு இழந்து நிற்கிறது
இழந்து கொண்டே நிற்கிறது;
'வாழும்' தமிழ் நாடு,
வேடிக்கை பார்க்க.
ஆம்,
இந்திய சிறையில்
சன்னல் கம்பிகளின்
சந்தில்
கண்களை வைத்து
வேடிக்கை பார்க்கிறதோ
'வாழும்' தமிழகம் ?



படிப்பகம்

www.padippakam.com

ஈழத் தமிழருக்கு இனவழிச் சொந்தம் தமிழ் நாடு. கியூபெக்கிற்கு இனவழிச் சொந்தம் பிரான்ஸ். இலங்கைத் தமிழருக்கு இனவழிச் சொந்தமாய் மலேசியாவிலும், தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட சில நாடுகளில் லட்சக்கணக்கில் தமிழர்கள் இருப்பதுபோல் கியூபெக்காரர்களுக்கும் சில நாடுகளில் இருக்கலாம். இருந்தாலும் முக்கியமானவைகளாக கியூபெக்கிற்குப் பிரான்ஸூம், இலங்கைத் தமிழருக்கு தமிழ் நாடும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. பிரான்ஸிலிருந்து கியூபெக் ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும். ஆனால், தமிழ் நாட்டிலிருந்து ஈழம் 20-25 கி.மீட்டர் தான் இருக்கும். இலங்கை அருகிலேயே இருப்பதால் சிங்கள இனம் ராணுவத்துடன் வளர்வது தமிழ் நாட்டு தமிழர்களுக்கும் பிரச்சனையாகவே இருக்கும்.

ஈழத்தமிழர் உட்பட இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு ஆதரவு குரல் கொடுக்க ஆறுகோடி தமிழர்களையுடைய தமிழ்நாடு இந்திய அரசின் கட்டுப்பாட்டில். சொந்த தமிழினத்தைக் காக்க வழியற்ற நிலையில், கைகள் கட்டப்பட்ட நிலையில் அல்லது உரிமை பறிக்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு. இதற்கு ஒரு நாட்டுக்கு இருப்பது போல் ராணுவமும் இல்லை; நாடு என்ற நிலையில் உலக அரங்கில் அங்கம் வகிக்கவோ, ஆதரவு திரட்டவோ வழியில்லை. ஆறுகோடி தமிழர்களை கொண்டிருக்கிற தமிழ்நாட்டை அங்கமாக கொண்டிருக்கிற இந்தியா, தமிழர்களின் உரிமைகளை, உணர்வுகளை மதித்து நடக்க வேண்டிய கடமையுடையது. ஆனால், அது கொழும்பில் எண்ணெய் கிடங்கு தீ பிடித்துவிட்டது, ஓடி வா இந்திய அரசே என்று சிங்கள அரசு அழைத்தால் ஓடுகிறது; தமிழர் உரிமைகளை பறித்தும், தமிழர்களை அந்நியர் என்று நாடு கடத்தியும் அனுப்பிய சிறிமாவோ பண்டார நாயகாவிற்கு இந்திய மக்களின் வியர்வையால் விளைந்த (தமிழர்களின் உழைப்பாலும் தான்) பணத்தைக் கொண்டு பலத்த பாதுகாப்பு தந்து மருத்துவம் செய்து கொள்ள வசதி செய்து தருகிறது. ஆனால், தமிழர்களை அகதிகளா கூட வந்துவிடக்கூடாது என்று நமது கடற்கரையில் ராணுவக்கரை அமைக்கிறது. நம் நாட்டின் லட்சணத்தைப் பார் தமிழா! ஆக, நாமும் நமது உழைப்பு வழிச் செல்வங்களும் நமது தமிழருக்கு உதவாமல் எதிராக திரும்பி நிற்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக மத்திய பிரதேசத்தில் இலங்கை ராணுவத்திற்கு இந்தியா ராணுவப் பயிற்சி கொடுக்கிறது என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் அவர்கள் அறிவிக்கிறார்.

கியூபெக்கிற்கு ஆதரவு குரல் கொடுக்க வல்லரசு என்று சொல்லப்படுவதும், ஐ.நா.வில் நிரந்தர உறுப்பினரும், ரத்ததிகாரம் கொண்டதும், எந்த நிலையிலும் எந்த வழியிலும் ஆதரவு கொடுக்க முடியும் என்ற நிலையில் நாடாக பிரான்ஸ். (தமிழ் நாடு போல மாநிலமாக அல்ல) உலக நாட்டரங்கில் பல நாடுகளிடமும், தனது உறவுகள் மூலமும்.



படிப்பகம்

www.padippakam.com

தனக்கிருக்கும் பங்கின் மூலமும் தாக்கத்தை உண்டாக்கி வைத்திருக்கும் நாடாக இருக்கிறது பிரான்ஸ். ஆனால், தமிழ் நாட்டின் உறவுகளும், பங்கும் உலக நாட்டரங்கில் என்ன செய்ய முடியும்? இந்தியாவின் வரம்புக்குள்தானே விண்ணப்ப வித்தகராக இருக்க முடியும்

அணு ஆயுத வல்லமை கொண்ட வல்லரசு, உலகமே கூடி நின்று எதிர்த்துபோதும் கண்டு கொள்ளாமல் அணு ஆயுதச் சோதனை நடத்திக்காட்டி வல்லவன் என்று காட்டிய நாடு தனக்கும், கியூபெக்கிற்கும் சம்பந்தம் உண்டு என்று காட்டும்போது அதன் அணு ஆயுத வெடிப்பிலும், ராணுவ வலிமையிலும், பொருளாதார வளமையிலும், உலக அரங்கிலுள்ள தனக்கான பாத்திரத்தாலும் கியூபெக்கிற்கான ஆதரவும், கனடா அரசிற்கான எச்சரிக்கையும், மற்றவர்களுக்கான எச்சரிக்கையும் பொதிந்திருக்கிறது.

ஆனால், ஈழத் தமிழர் பாதிக்கப்படும் போதெல்லாம் ஆவேசப்படுகிறோம்; ஆர்ப்பாட்டம் செய்கிறோம்; ஊர்வலம் நடத்துகிறோம். ஏன் சட்டமன்றத்தில் கூட தீர்மானம் போட முடியும். ஆனால், சட்டமன்றமும் இந்திய அரசிடம் விண்ணப்பிக்கத் தான் முடியும். ஐ.நாவிடமும் விண்ணப்பிக்கலாம். 1,35,00,000 சிங்களர் ஆயுதங்களை குவித்து வைத்துக்கொண்டு ஈழத்தமிழர்களை அழிக்கும்போது 6 கோடி தமிழர்கள் விண்ணப்பிக்கத்தான் முடியும். நிறைய காகிதம் வேண்டுமே விண்ணப்பிக்க! தமிழ் நாட்டரசே நிறைய காகித ஆலைகளையாவது உருவாக்கு. வங்க தேச மக்களை பாகிஸ்தான் ராணுவம் சித்திரவதை செய்தபோது அன்றைய மேற்கு வங்க முதல்வர் சித்தார்த்த சங்கர் ரே இந்திய அரசே ராணுவத்தை அனுப்பு, மறுத்தால் நான் காவல்துறையினரை அனுப்புவேன் என்றும், வங்காளிகள் சாவதை வேடிக்கை பார்க்க முடியாது என்றும் சொன்னது போலவா இன்றைய தமிழக முதல்வர் சொல்லப் போகிறார்?

தமிழர்களே, சிங்களர்-தமிழர் போராட்டத்தில் பாதிக்கப்படும் இலங்கை தமிழினத்தின் இனவழிச் சொந்தமில்லாத, இந்தி ஆதிக்க வெறி கொண்டவர்களின் கைகளில் இந்தியாவின் ராணுவம் இருக்கிறது; உலக அரங்கில் பாத்திரம் வகிக்கும் நிலை இருக்கிறது. கிட்டதட்ட 85 கோடி மக்களையுடைய மிகப் பெரிய நாடான இந்தியா ஐ.நா.வில் நிரந்தர உறுப்பினராவோ, வீட்டோ அதிகாரத்துடனோ இல்லை என்றாலும், அந்த அரங்கில் இதற்கும் ஒரு பங்கு இருக்கிறது.

கனடாவில் கியூபெக்கில் குண்டு மழை பொழிந்திருந்தால், ஆயிரம் ஆயிரம் கியூபெக் பிரஞ்சுக்காரர்கள் கொல்லப்பட்டிருந்தால், லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டிருந்தால் வல்லமை மிக்க



படிப்பகம்

www.padippakam.com

பிரான்ஸ் வேடிக்கைப் பார்த்துக் கொண்டா இருந்திருக்கும், தமிழ்நாட்டைப் போலவும், இந்தியாவைப் போலவும்? தமிழ் நாடு தான் இந்தியாவின் வீட்டுக் காவலில் இருக்கிறதே!

பிரான்ஸைப் போன்று உலக அரங்கில் பங்குபெறும் பாத்திரம் தமிழ் நாட்டிற்கு இல்லையென்றாலும், கியூபெக்காரர்களுக்கு பிரான்ஸின் ஆதரவு என்ற நிலையிலும், இலங்கைத் தமிழருக்கு தமிழ் நாட்டின் ஆதரவு என்ற நிலையிலும் உணர்வால் ஒன்றாய் இருக்கிறோம்.

தமிழா, ஐ.நா.விற்கும், இந்தியாவிற்கும், ஏன் இலங்கைக்குமே கூட விண்ணப்பம் போட்டுக் கொண்டிரு தமிழா. விண்ணப்பத் தமிழன் என்ற பட்டத்தையாவது பெற்றுவிடலாம்! கின்னஸ் ரெக்கார்டில் கூட இடம் பிடித்துவிடலாம்! அதிகார வர்க்கத்திடம், அதிகாரமில்லாத குடிமக்கள் கொடுக்கும் விண்ணப்பங்கள் போன்றே அதிகார வர்க்கங்களின் விருப்பங்களே உனது கோரிக்கைகளை ஒட்டிய நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும்.

தமிழ்நாடு, பிரான்ஸ் போன்று தனித்து பாத்திரம் வசிக்க வேண்டும் என்பதல்ல. ஆனால், நமக்கான நாடாக இருக்கிற இந்தியா தனது கடமையைச் செய்ய வேண்டும் என்கிறோம். அதுவும் நம்மைக் கலந்துதான் செய்ய வேண்டும். அது என்றைக்கு செய்தது சரியாக? இந்திராகாந்தி அம்மையார் பிரதமராக இருந்தபோது தமிழ்ப் போராளிகளுக்கு பயிற்சி அளித்தது, நெருக்கடியான நேரத்தில் இலங்கை அரசை எச்சரித்தது. பின்னர் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் காலத்தில் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தது., உணவுப் பொட்டலம் போட்டது, இலங்கை அரசை தாமதித்தாவது எச்சரித்தது என்று கடந்த காலங்களில் தமிழருக்கு ஆதரவான பாத்திரத்தையும், தமிழர்களை நாடற்றவர்களாக்கியபோது ஒப்புக் கொண்டு 4 லட்சத்து 60 ஆயிரத்து 281 தமிழர்களை அழைத்துக் கொண்டு வருவதாக கடத்தி வந்தது, இலங்கை தமிழர் உரிமை பறிக்கப்பட்டபோது வேடிக்கைப் பார்த்தது, நியாயமான நடுவராக இல்லாது நடந்து கொண்டது இவற்றால் சிங்களருக்கு ஆதரவாத பாத்திரத்தை வசித்தது. எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்ற சமுதாய அக்கறையற்றவரின் பாத்திரத்தை மட்டுமா விட்டுவிட்டது?

1-11-95-ல் கியூபெக்கில் நடந்த தனி நாட்டுக்கான வாக்கெடுப்பு முடிவை குறித்து மறுநாளே பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஹார்வி-டி-சாரட் அவர்கள் கியூபெக்கில் நடந்த தேர்தல் முடிவுகளை மதிக்கிறோம் என்றும் இருப்பினும் கியூபெக் மாகாணத்துடன் நெருங்கிய உறவு வைத்துக் கொள்ளுவோம் என்றும் திட்டமிட்டபடி பிரான்ஸ் பிரதமர் அலென் ஜுப்பே அடுத்த ஆண்டு தொடக்கத்தில் கியூபெக் செல்வார் என்றும் அறிவிக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

தேர்தலில் தோற்றுப்போன அரசியல்வாதிகள் வருத்தத்தோடு தெரிவிக்கும் மக்களின் தீர்ப்பை ஏற்கிறோம் என்ற வாசகத்தைத்தானே பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் வைக்கமுடிகிறது. கனடாவின் பிரதமரைப் போல் கொண்டாடவோ அல்லது அமெரிக்க அதிபர் கிளிண்டன் அவர்களைப் போல் கனடா பிரதமருக்கு வாழ்த்துச் சொல்லவோ முடியவில்லையே ஏன்? இன வாஞ்சை.

திட்டமிட்டபடி பிரான்ஸ் பிரதமர் அடுத்த ஆண்டு கியூபெக்கிற்கு பயணம் செய்ய இருப்பதையும், கடந்த காலத்தில் இலங்கையில் தி.மு.க. தடை செய்யப்பட்டதையும், அதன் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் அங்கு பயணம் செய்ய அனுமதிக்காததையும் எண்ணிப்பார்த்தால் இலங்கை அரசின் யோக்கியதை புரியும். மேற்படி காரியத்தைச் செய்தவர் இன்றைய இலங்கை அதிபரின் தாயாரும், இன்றைய பிரதமரும், அன்றும் பிரதமராக இருந்தவரும், இப்போது இந்திய அரசின் பலத்த காவலுடன் திருவனத்தபுரத்தில் சிகிச்சை பெற்றுவருபவருமான சிறிமா பண்டார நாயகா அவர்கள்.

இன்றைய நிலையில் ஆயிரக்கணக்கில் செத்தவரும், காயம்பட்டவரும் என்றும் லட்சக்கணக்கில் அகதிகளாகவும் தத்தளிக்கும் நிலையும் இலங்கையில் வாடிக்கையாக இருக்கிறது.

ஏதிலிகள் என்று இழந்து நிற்பதா?
அகதிகள் என்று அவமானப்படுவதா?
ஏதிலிகள் என்று கையேந்தி நிற்பதா?
அகதிகள் என்று அவதிப்படுவதா?
தன்மானம் இழந்து என்ன செய்வது?
தமிழ்மானம் இழந்து என்ன செய்வது?
அவமானம், கோபம்,
சங்கடம், துயரம்,
வேதனை, வெறுப்பு
விளையாடும் மனமே
தமிழனின் மனமோ?

இந்த நிலையிலும், நாம் வழக்கம்போல விண்ணைப்பத்திருவிழா நடத்திக் கொண்டுதான் இருக்க முடிகிறது. தமிழனுக்கு ஒரு அரசு; அந்த அரசுக்கு ராணுவம் இருந்திருந்தால், உலக அரங்கில் குரல் எழுப்பும் நிலை இருந்திருந்தால் இந்நிலை இலங்கை தமிழருக்கு ஏற்பட்டு இருக்குமா? பிரிவினை நமது நோக்கமல்ல என்றாலும் பிரச்சனைகளை அதனதன் கோணங்களில் இருந்து பார்க்காமல் விட்டுவிட முடியாது. பிரச்சனைகளும் அவற்றை தீர்ப்பதிலும் தான் பிரிவினை அல்லது ஒற்றுமை இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

பிரச்சனை கடுமையாக வரும்போது பிரான்ஸின் கரங்களில் இருக்கும் ஆயுதங்கள் கியூபெக்கின் எல்லைகளை காக்கலாம். ஐ.நா.வில் அதற்கு இருக்கும் அதிகாரம் கியூபெக்கிற்கு எதிராக அமெரிக்காவே நின்றாலும் தடுத்து நிறுத்த இயலும். வல்லரசு நாடு என்ற அளவில் அது உலக நாடுகளுடன் கொண்டிருக்கும் தொடர்பால் ஆதரவு திரட்ட முடியும். அந்த ஆதரவில் நட்பு, அதிகாரம், இன உணர்வு என்ற பரிமாணங்கள் இருக்கின்றன.

ஆனால், தமிழ் நாட்டுக்கு ? நாம் போடும் விண்ணப்பம், முழக்கம் ஈழத்தில்-இலங்கையில் தமிழர்களுக்காக காவல் காக்க முடியுமா ? அப்படிச் செய்யச் சொல்லி வேண்டுமானால் விண்ணப்பிக்கலாம். இதைக் கண்டா சிங்கள அரசு அஞ்சப்போகிறது ? அஞ்சினாலும் எந்த அளவில் ?

தமிழகத்தில் சாதிகள் என்ற பிரிவுகளும், உணர்வுகளும், அவற்றிற்கு இடையிலான முரண்பாடுகளும், அதனால் எழாது இருக்கும் தமிழின உணர்வு வீச்சும் ஒருபுறமிருக்க, அறியாமை, வறுமை என்னும் இருபெரும் விலங்குகளுக்குள்ளும் பெரும்பாலான மக்கள் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலை மறுபுறம். நேரடி பாதிப்பு நேரவில்லை என்பதும் இன்னொன்று.

தமிழ் நாட்டு மக்கள்தான் பல கட்சிகளில் கிடக்கிறார்கள் என்றால், தமிழ் நாட்டு இயக்கங்களும் நவக்கிரகங்களைப் போல் ஒவ்வொன்றும் வெவ்வேறு திசையில் விழிக்கின்றன. சில இயக்கங்கள் அரும்பாடுபட்டு உணர்வோடு உழைப்பதும் உண்டு. சிலர் ஓட்டு வேட்டையை எண்ணி அறிக்கை புலிகளாய் இருப்பதும் உண்டு. சோரம் போனவர்களும், லட்சிய வாதிகளின் முழக்கங்களை உச்சரிப்பது மனதுக்கு நெருப்பை விருந்தாக்குவதாய் இருக்கிறது. சோரம் போனவர்களின் வீர முழக்க நடிப்பில் லட்சியப் போலிகளும், லட்சிய வாதிகள் போல் தெரிந்து விடுவதும் உண்டு. வரம்புக்குள் நின்றாலும் உணர்வால் ஒன்றி உதவ முயலும் மக்களும், மக்கள் இயக்கங்களும் லட்சியத்தை நோக்கி உழைக்க வேண்டும்.

டாக்டர் ராமதாஸ் அவர்களை நிறுவனராகக் கொண்ட பா.ம.க. தமிழகம் தழுவிய கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தியதும், திருவனந்தபுரத்தில் கேரள தலைமைச் செயலகம் முன்னர் ஆர்ப்பாட்டம், (சிறிமா பண்டார நாயகாவிற்கு மருத்துவ வசதி செய்து தந்த மத்திய அரசை கண்டித்து) நடத்தியதும், வை.கோபால்சாமி அவர்களை பொதுச்செயலாளராகக் கொண்ட ம.தி.மு.க. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு தழுவிய ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தியதும், டெல்லிக்குச் சென்று பாராளுமன்றத்திற்கு முன்பு மத்திய அரசை



படிப்பகம்

www.padippakam.com

கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியதும் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக நிற்கும் அரசியல் கட்சிகளில் இவ்விரண்டும் முன்னணியில் இருப்பதைக் காட்டுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகள் ஒன்றுகூடி 30-11-95 அன்று நடத்திய முழு அடைப்பு இலங்கைத் தமிழருக்கான தமிழக மக்களின் ஆதரவை முழு அளவில் வெளிப்படுத்துவதாக இருந்தது. தலைநகர் தமிழ்ச்சங்க செயலாளர் சுந்தரராசன் அவர்களும், பன்னாட்டு தமிழுறவு மன்ற தலைவர் வா.மு. சேதுராமன் அவர்களும் முயற்சித்ததின் பயனாய் தி.மு.க. கூட்டணி கட்சிகளின் சார்பில் முழு அடைப்பு அறிவிக்கப்பட்டதும், தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள் அனைத்துக் கட்சிகளின் ஆதரவைக் கோரியதும், குறிப்பாக ஆளும் கட்சியின் ஆதரவைக் கோரியதும், அதனை அடுத்து ம.தி.மு.க. உடனடியாக ஆதரவு தெரிவித்ததும், தொடர்ந்து எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வும், வாழப்பாடியார் அவர்கள் தலைமையிலான காங்கிரசும், வலது கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரவு தெரிவித்ததும், அடுத்து ஆளும் ஆதி.மு.க.வும், தி.க. தமிழ் தேசிய இயக்கம் உள்ளிட்ட பல இயக்கங்களும் ஆதரவு தெரிவித்தன. தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் பல விதங்களில் தீவிரமாக முரண்பட்டு நின்றாலும், ஆளும் கட்சிக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்கள் ஆதரவு கோரி அறிக்கை விட்டதும், அதையேற்று தமிழக முதல்வராக இருக்கும் அ.தி.மு.க பொதுச்செயலாளர் அவர்களும் ஆதரவு தெரிவித்து அரசு விடுமுறை அறிவித்ததும் குறிப்பிடத்தக்கதும், பாராட்டப்பட வேண்டியதும் ஆகும்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை கோபால்சாமி அவர்கள் மாநிலங்கள் அவையில் இலங்கைப் பிரச்சனையைப் பற்றி பேசியவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுமாறு அவைத்தலைவர் உத்தரவு போட்டு, இலங்கை நட்பு நாடாக இருக்கிற காரணத்தால் அவற்றை ஏற்க மறுத்துவிட்டார். நாம் இங்குதான் கேட்க வேண்டியதாய் இருக்கிறது, 1 கோடியே 35 லட்சம் சிங்களர்கள் *நாடு* உடையவர்களாக இருப்பதால் 6 கோடி தமிழர்களின் குரல்கள் புறக்கணிக்கப்படுகிறதா ? என்று. 6 கோடி தமிழர்கள், மாநிலம் கொண்டவர்களாக மட்டும் இந்திய அரசின் காலடியில் கிடக்கும்போது, தமிழருக்கெதிரான சிங்கள அரசிற்கு இந்தியா நட்பு நாடாக இருக்க முடிகிறது.

தமிழ் நாட்டுக் தமிழா, அதிகாரமற்ற அநாதைகளாகி விட்டோமோ நாம் ? அநியாயத்தை நடத்தினாலும் சிங்கள அரசுடன், அதிகார வர்க்க தோழமை கொண்டாடுகிறதா இந்திய அரசு ?

அண்மையில், பஞ்சாப் மாநிலத்தவரான அகாலிதள தலைவர் சிம்ரஞ்சித் சிங் மான் அவர்களும், மராட்டியத்தை சேர்ந்தவரும்,



படிப்பகம்

www.padippakam.com

சிவசேனையின் தலைவருமான பால் தாக்கரே அவர்களும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்திருப்பது கவனிக்கத்தக்கது. அவர்களது இயக்கங்களின் போக்கும் நோக்கும் எவ்வாறு இருந்தாலும் இந்த நிலையில் தமிழினம் அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்த துணைக்கு வரும் குரல்களாக கருத வேண்டும்.

**பிற நாடுகளும், ஐ.நா.வும். — —**

தனது நாட்டு குடிமக்களுக்கு உரிய உரிமைகளும், நியாயங்களும் அந்நாட்டு அரசாலேயே மறுக்கப்பட்டாலும், அடுத்தவர் தலையிடக்கூடாது என்பதற்காக தனது சொந்த நாட்டுப் பிரச்சனை என்று பேசும் பேரினவாத அரசுகளின் வாதங்கள் குடிகாரக் கணவனின் அடாவடித்தனத்தில் அன்றாடம் வதைபடும் மனைவிக்காக நியாயத்தின் பொருட்டும் யாரும் வரக்கூடாது, இது என் வீட்டுப் பிரச்சனை என்பது போன்றது தான்.

பொதுப்படையாகவே, ஒரு நாட்டிலுள்ள இனங்களின் அல்லது இரு நாடுகளுக்கு இடையிலான பிரச்சனைகளில் அவ்விரு இனங்களுக்கான அல்லது அவ்விரு நாடுகளுக்கான மக்களே அதிகம் பாதிக்கப்படுவர்; அக்கறை காட்டுவர். அடுத்து இனவழி சொந்தமான நாடுகள் அக்கறைக் காட்டும். மூன்றாவது நாடுகள் கண்டும் காணாமல் போவதுதான் பல நேரங்களில் நடப்பதுண்டு. ஆனால், மூன்றாவது நாடுகளும் ஐ.நா.வும் பங்கு பெற்றுதான் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டி வரலாம். குற்றமில்லாத போது இன ரீதியாக ஒரு இனம் கொடுமைக்கு ஆளாவதை சொந்த நாட்டுப் பிரச்சனையென்று விட்டுவிடுவது சரியன்று.

இலங்கை நாட்டு ராணுவமோ
ஒன்று கூடி ஓடி ஓடி
சொந்த நாட்டு மக்கள் மீது
குண்டுமாரி பெய்யலாம்
அந்நாட்டு சிக்கலென்று
எந்த நாடும் சொல்லலாம்.
எந்நாட்டு மக்களென்ன
என்ன குற்றம் செய்தனர் ? - தாம்
தமிழராக பிறந்ததொன்றே
குற்றம் என்று சொல்வதா ?
மனிதவேட்டை நடத்தும் காட்டை
நாடு என்று சொல்வதென்ன
நியாயமோ ?

- என்றுதானே கேட்க வேண்டியதாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இலங்கையில் சிங்களர்-தமிழர் பிரச்சனையில் சில நாடுகள்-கனடா, ஆஸ்திரேலியா, சில ஐரோப்பிய நாடுகள் அக்கறை காட்டினாலும் அது பிரச்சனையை முடித்து வைக்கும் வரை வரவில்லை. இந்தியா 1980-களில் தலையிட்டு நடவடிக்கை எடுத்தும் அது சரியான திசையில் செல்லாது தடம் மாறிப் போய்விட்டது.

போஸ்னியா-ஹெர்ஸகோவினா பிரச்சனையில் அக்கறை காட்டும் நாடுகள் அந்த அளவு அக்கறையை இலங்கை பிரச்சனையை எண்ணும்போது தொலைத்து விடுகின்றன போலும்.

நைஜீரியாவில் மனித உரிமை இயக்க தலைவரும், பத்திரிக்கையாளரும், கவிஞருமான ஒகோனி இனத்தவரான கென் சரோ வைவா உள்ளிட்ட சிலரை தூக்கிலிட்டதற்காக காமன்வெல்த் அமைப்பிலிருந்தும், ஐ.நா.வில் இருந்தும் அந்நாடு நீக்கப்பட்டு விட்டது. அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, உள்ளிட்ட பல நாடுகள் தங்களது உறவுகளை துண்டித்துக் கொண்டு அதை தனிமைப்படுத்திவிட்டன. அது ரொம்ப சரியானதே. ஆனால், இலங்கையில் ராணுவத் தாக்குதலால் பாதிக்கப்பட்டு, அவதிப்படும் தமிழர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா.அமைப்பு உள்ளிட்ட எதையும் அனுமதிக்கமாட்டேன் என்று சொல்லும் இலங்கை அரசின்மீது ஐ.நா.வோ, அணி சேரா நாடுகளோ, காமன்வெல்த் கூட்டமைப்போ ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது?

போஸ்னியாவில் ஒத்துவர மறுப்பவர்கள் மேல் நேட்டோ ராணுவ நடவடிக்கையை ஐ.நா. அனுமதியோடு செய்தது போல் ஏன் இங்கு செய்யக்கூடாது?

இதே போன்ற பெரும்பான்மை - சிறுபான்மை பிரச்சனை வந்தபோது, துருக்கி நாடு பொறுத்து பார்த்துவிட்டு, நடுவர் நாடுகளின் லட்சணத்தையும் பார்த்துவிட்டு, தானே தனது ராணுவத்தை அனுப்பி சைப்பிரஸ் நாட்டில் வாழும் பாதிக்கப்பட்ட தனது இனமான துருக்கியர்களுக்கு பாதுகாப்பு கொடுத்ததுபோல் இங்கு யார் செய்வது? தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களுக்கும் நாடான இந்தியா தானே செய்ய வேண்டும்?

கிட்டதட்ட 5 லட்சம் தமிழர்கள் யாழ்ப்பாண பகுதியை விட்டோடி அகதிகளான பின்னராவது ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் புட்ரோஸ் காலி அவர்கள் உலகச் சமுதாயம் ஈழத்தமிழருக்கு உதவ வேண்டும் என்றும், போரை நிறுத்தி விட்டு பேசச் சொல்லியும் கேட்டிருக்கிறார்.

ஆனால், ஐ.நா. உள்ளிட்ட யாரையும் உள்ளே விடமாட்டோம், எங்கள் நாட்டுப் பிரச்சனை என்று ஆயுதங்களை மடிகட்டிக் கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

திரியும் இலங்கை அரசு மீது ஐ.நா. சபை மூலம் நடவடிக்கை எடுத்தால் நல்லது; அதை மறுத்தால் மறுக்கும் எவர்மீதும் தமிழர் நலன் கருதி நடவடிக்கை எடுப்பதும் சரியே.

இத்தனைக்கும் பின்னால், இலங்கை அரசின் எண்ணெய் கிடங்குகள் தீப்பற்றி எரிந்தபோது (விடுதலைப் புலிகளின் தாக்குதலால்), தீயை அணைத்து அவற்றைக் காக்க ஏவுகணை வேகத்தில் உதவி செய்து விட்டு, எங்கள் நாட்டு பிரதமர் கூட முணுமுணுத்திருக்கிறார். பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்று.

இலங்கையில் ஏராளமான தமிழர்கள் செத்துமடியும்போது சிகிச்சைக்கு வழி செய்யாத இந்திய அரசு, இலங்கைப் பிரதமருக்கு திருவனந்தபுரத்தில் பலத்த பாதுகாப்புடன் சிகிச்சை அளிக்க வசதி செய்துள்ளது. இது ஒரு காலத்தில் குள்ளநரி செயவர்த்தனா குறிப்பிட்ட மூக்கு அடிப்படையிலான உறவினாலா அல்லது அநீதி என்றாலும் கண்டு கொள்ளாது உறவாடும் அதிகார வர்க்கங்களின் தோழமையினாலா? அல்லது மனிதாபிமானத்தின் அடிப்படையினாலா? மனிதாபிமான அடிப்படையில் என்றால், இலங்கையில் சாகும் தமிழர்கள் எல்லோரும் மனிதர்களாகத் தெரியவில்லையா?

*பொதுவாகப் பார்த்தால்,*

மனிதத்தை விரும்பும்
மனசாட்சி மாந்தர்
அங்கேயும் இருப்பார்
இங்கேயும் இருப்பார் - ஆனால்
இனவெறிக் கடலில்
எங்கோ கிடப்பார்.

எல்லாம் மனிதர்
என்ற நிலைமை
வந்தால் போதும்
போர்ப்பிணி தீரும்.

என்ற கருத்தில் யார் முயற்சித்தாலும் மனித உயிர்கள் பலியிடப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும். நியாயத்திற்காக நிற்பவர் யாராக இருந்தாலும் மதம், மொழி, நாடு, இனம், சாதி எல்லாவற்றையும் கடந்து மதிக்க வேண்டும்; இணைக்க வேண்டும். நியாயங்களை ஒவ்வொரு மனிதருக்கும் கற்பிப்பதிலும், அவற்றை ஏற்று நடப்பதிலும் அல்லது நடைமுறைப் படுத்துவதிலும் தான் ஒவ்வொரு மனிதனின் உரிமை வாழ்வும், உலக அமைதியும் அடங்கி இருக்கிறது.

புத்தர் காட்டும் ***எட்டு வழி*** களான, சரியான கண்ணோட்டம், சரியான சிந்தனை, சரியான பேச்சு, முறையான வாழ்க்கை, சரியான



படிப்பகம்

www.padippakam.com

முயற்சி, சரியான கரிசனை, சரியான அவதானம், சரியான செயல் இவற்றை பௌத்த சிங்களர்கள் விட்டுவிட்டு பௌத்த சிங்கள வெறி மீது பற்று கொண்டு,, அதையே வழியாய் பற்றிக்கொண்டு திரிவதை விட்டுவிட்டு புத்தரின் ***சரியான எட்டு*** க்கு வருவது எப்போது ?

இது நடுவராக வருபவர்களுக்கும், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கும், தமிழர்களுக்காக போராடுபவர்களுக்கும் பொருந்தும்.

நாம் எதையும்
ஆதரிக்கவில்லை,
நியாயத்தை தவிர.
நாம் யாரையும்
ஆதரிக்கவில்லை,
நியாயத்தை மீறி.
நியாயத்தை,
நியாயத்தை ஆதரிப்பவர்களை
ஆதரிக்கிறோம்,
தோழமையோடு.
ஏனென்றால்
நியாயத்தைப்போலவே
நியாயமானவர்களும்
அடுத்தவர் உரிமையை
உயிராய் மதிப்பதால்!

கனடாவின் கியூபெக்கில் பிரச்சனைகளுக்கான தீர்வு மக்கள் கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டுவிட்டதால், ஐ.நா.வுக்கோ, மூன்றாவது நாடுகளுக்கோ பிரச்சனையில் தலையிட வேண்டிய தேவையே எழவில்லை. ஆனால், இலங்கையில் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டியது ஆயுதம் தரித்தவர்களின் கைகளில் இருப்பதால், பொது மக்கள் என்ற அளவில் பெருமளவில் தமிழர்களே பாதிக்கப்படுவதாலும் ராணுவம் அல்லது புலிப்படை இருதரப்புமே மனிதர்கள்தான் என்பதாலும், எவருமே தேவையற்ற முறையில் ரத்தம் சிந்துவதை தவிர்த்து, மீண்டும் சிங்கள பேரினவாத அரசியல் வாதிகள் இனவெறி அரசியல் நடத்த வழியில்லாது செய்து, அந்தந்த இனத்திற்கு உரிய உரிமை வரம்புகளை நிறைவு செய்து பிரச்சனையை தீர்த்து வைக்க வேண்டிய கட்டாயத் தேவை ***மானுடத்தை விரும்பும்*** எவருக்கும் இருக்கிறது.

\- ஆதவன் சேதுவராயன்.

குறிப்பு : மேற்கண்ட கட்டுரையை 25-9-96 முதல் 2-10-96 வரை வெளியிட்டு உதவிய தினப்புரட்சி நாளேட்டிற்கு நன்றி!



படிப்பகம்

www.padippakam.com

## உதவிய நூல்கள்

1. கீத பொன்கலன். ச - *பௌத்த சிங்களரும் சிறுபான்மையினரும்* சென்னை, 'செரோ' 1987

2. பிருமிள் தர்மோத் ஜீவராமு - *ஸ்ரீலங்காவின் தேசியத் தற்கொலை* சென்னை; பரிவர்த்தனா பப்ளிஷர்ஸ், 1984.

3. சிவச்சந்திரன். இரா
குமாரி ஜெயவர்த்தனா } - *மலையகத் தமிழ் மக்கள்* சென்னை; பொன்னி, 1987.

4. கலாநிதி சலாஹி சோனியல் - *சைப்பிரசில் துருக்கியரும், இலங்கையில் தமிழர்களும்* சென்னை; ஈரோஸ் ஆவண காப்பக வெளியீடு, 1988.

## நாளேடுகள்

1. தினத்தந்தி கட்டுரை - *கனடா சிதறுண்டு போகுமோ ?* நவம்பர் - 1995.

2. விடுதலை தலையங்கம் - *கியூபெக் மாநிலத்தில் நடந்த கருத்துக் கணிப்பு* நவம்பர்-2, 1995.

3. தினமணி செய்தி - நவம்பர்-1 1995.

4. தினமலர் செய்தி - நவம்பர்-2 1995.



படிப்பகம்

www.padippakam.com

## கண்ணீரோ நிரந்தரம்?

நாற்றுகளுக்கும் மாற்றிடம்
நிரந்தரமாய், வயல்!
கூட்டோடு மரம் போனாலும்
மறு கூட்டிற்கு
உரிமையோடு வேறுமரம்,
பறவைகளுக்கு!
ஆனால்
பிடுங்கப்பட்ட நாற்றுகளாய்,
நட இடமின்றி;
கூடிழந்த பறவைகளாய்
மாற்று மரமின்றி;
ஈழத்தமிழர் நாம்
அகதிகளாய்!
நாங்கள்,
நெருப்புத்துண்டுகளால்
நெருக்கப்பட்ட புழுவாய்
அவதியில் அகதிகளாய்!

நாங்கள்,
நாற்றுகளாக இருந்திருக்க கூடாதா,
அறுக்கப்படும் வரைக்கும்
வயலே நிரந்தரம்!
நாங்கள்
பறவைகளாக இருந்திருக்கக் கூடாதா,
வனத்திலாவது
கூடுகள் நிரந்தரம்!
மீன்களாகவாவது இருந்திருந்தால்
உண்ணப்படும் வரையாவது
நீரில் வாழ்வு நிரந்தரம்!
என்னக் கொடுமை!
தமிழராய் பிறந்தோம்,
கண்ணீரே நிரந்தரம்!



படிப்பகம்

www.padippakam.com

## நாட்டுச்சிறை

ஆறுகோடி தமிழரது கைகளில்
ஆயுதங்கள் ஏதுமில்லை காக்கவே - இதில்
நாலில் ஒன்று என்றிருக்கும் சிங்களர்,
இலங்கை நாட்டு சுதந்திரத்தால்
காவலுக்கு ராணுவத்தை நிறுவினர்.
தங்களுக்கு காவலுக்கு என்றிருந்தால்
எங்களுக்கு தொல்லையில்லை மாந்தனே.

இலங்கை மண்ணில் இனவெறியில்
தமிழினத்தை வேரறுக்க வந்ததே! - அது
தினந்தினமும், அணிஅணியாய் தமிழர்களை
காவு கொள்ளும் கொடுமையும்
எல்லைதாண்டி தமிழகத்து மீனவர்கள்
உயிர்பறிக்க குண்டுமாரி பெய்வதும்,
மொத்தமாக தமிழினத்தை வேட்டையாட
வந்ததாலே வந்ததய்யா
நமக்கு ரொம்ப பாதகம்!
தமிழர் நாடு இந்தியாவின் காவலில்
இருப்பதொன்றே சிங்களர்க்கு சாதகம்!

சிங்களத்து ராணுவத்தான்
காவல் என்று ரோந்து வந்து
கடலில் சுட்டுப்போடுறான்.
தமிழினத்தான் மீனவனாய்
தினந்தினமும் சாகிறான்!
மீனுக்கிரை ஆகிறான் - அவன்
மீண்டும் மீண்டும் சுட்டுவிட்டு
சுதந்திரமாய் போகிறான்!
இந்தியாவில் இருக்கும் ஆட்சி
எங்களுக்கு செய்கிறது பாதகம்! - இதில்
இருப்புதாலே இருக்கவில்லை
எந்தநாளும் காவலும்!
இந்த எண்ணம் பிறக்கும்போது
என்ன தோணும் தமிழனே!



படிப்பகம்

www.padippakam.com

ஏற்றவழி பார்த்து வழி
பண்ணவேண்டும் தோழனே! - நீ
மனிதனாக இருந்தபோதும்
இந்தியனாய் தெரிந்தபோதும்
எதிரி தந்தான் வேட்டடி - நீ
என்ன செய்து கொடுத்திடுவாய் பதிலடி?

## செந்தூர வானமல்ல

தமிழா!
அந்தி வானத்தில் தூவிக்கிடப்பது
செந்தூரமல்ல,
ஈழத்தமிழர் சிந்திய ரத்தத்தின்
படக்காட்சி!

அதிகாரம் கொண்ட
அநியாயக்காரர்கள்
ஈழத்தமிழர் வாழ்வை
சூறையாடுவதைக் கண்டு
கடலலைகள் கூட
பொங்கி எழுகின்றன!
பொங்கி எழும்
கடலுக்கு நடுவில் தமிழா,
நீ மட்டும்
மங்கிக் கிடப்பது ஏன்?

ஏ! தமிழா
நீ யாரென்பதை மறந்துவிட்டாயோ?
உன்னைக் கட்டிக் காத்த
தமிழைத்தான் ஏன் மறந்தாய்?
உனது முன்னோரின்
மான வரலாற்றை தான் மறந்தாயா?
சோற்றுக்கு சுழலும்,
சோற்றுக்கு மட்டும் சுழலும்
சக்கரமா நீ?



படிப்பகம்

www.padippakam.com

தமிழனை இழிவு செய்ததற்காக
படையோடு சென்று
வடநாட்டை வென்று - எதிரி
தலைமீது கல்லேற்றி வந்த
வரலாற்றை மறந்தாயோ ? - அந்த
மானமறவர் வாழ்ந்த மண்ணில்
தமிழர் புகழ்பாடும் மண்ணில்
பிறந்த நீ
உறங்கிக் கொண்டிரு !

உனது
அண்ணன்தம்பியர்
மடிக்கப்பட்டு
மண்ணுக்கு அனுப்பப்படும்
அநியாயத்தைக் கண்டுகொண்டே இரு !

மறையும் கதிரவன் கூட
ஈழத்தில் நடக்கும்
அநியாயத்தை படமெடுத்து காட்டுவதாய்
செந்நிற வானத்தை
வெளிச்சம் போட்டுக்காட்டுகிறான் !
தமிழா, நீ
நீ மட்டும்
மறதியில்,
மவுனத்தில்,
அன்றாட தேவைக்கு மட்டும்
உழைக்கும் பொதிமாடாய் போ !
தேசிய குழப்பத்தில்
படுபாவிக்கு கூட
ஆதரவுக்குரல் கொடு !!
நீ
இருளுக்குள் விழுந்த
கரும்பொருள் ஆவாய் !
தமிழினத்தில் விளைந்த
சொத்தையாய் போவாய் !



படிப்பகம்

www.padippakam.com

## நீ தமிழன் இல்லையா ?

தமிழன் என்பதால் ஒடுக்கப்படுகிறான், துரத்தப்படுகிறான்.
தமிழை பேசும் மனிதா - நீ
தமிழன் இல்லையா ?

தமிழன் என்பதால் அழிக்கப்படுகிறான், எரிக்கப்படுகிறான்.
தமிழை பேசும் மனிதா - நீ
தமிழன் இல்லையா ?

தமிழச்சி என்பதால் கெடுக்கப்பட்டே அழிக்கப்படுகிறாள்
தமிழை பேசும் குழுவே - நீ
தமிழினம் இல்லையா ?

தமிழன் என்பதால் உரிமை பறிப்பு,
உடமையை பிடுங்கி துரத்தியடிப்பு;
தமிழை பேசும் குழுவே - நீ
தமிழினம் இல்லையா ?

## ரத்தச் சேற்றில்...

வைத்த காலை - தீ
சுட்டது போல
ஓடுகிறது தமிழினம்!
ரத்தச் சேற்றில்
மடிந்தது போக
நீயும்நானும் தமிழினம்!
எனக்கு,
வெட்கமாக இருக்கிறது
தமிழனென்று சொல்ல!
தூக்கில் தொங்கிவிடலாம்
போலிருக்கிறது,
நமது நிலையை
எண்ணி!
தோழா, உனக்கு ?
ஒருமையில் அழைப்பதால்
கோபப்படுகிறாய் என்றால்
கோபப்படு!
சொரணை இருப்பதையாவது
உறுதி செய்து கொள்கிறேன்!



படிப்பகம்

www.padippakam.com

# அகதி

சொந்த நாட்டில்
அடிமை!
வந்த நாட்டில்
அகதி!
எந்த நாட்டில்
குடி நான்?

இலங்கை மண்
சுடுதென சொல்லி
ஓடிவந்தோம்
இந்திய நாட்டில்
சிறைபட!

பாழும் பனைமரத்து
நிழலிலும்
உரிமையோடு ஒதுங்கலாம்,
அகதியாய் ஒதுங்குவதைவிட!
அண்டி நிற்பதும்
ஏந்தி நிற்பதும்
மான வாழ்வுக்கு
மரண வதை!

குற்றமிழைக்காத
கைதிகள் -
இதற்கு பொருள்தான்
அகதியோ?
அடபாவி
தண்டிக்க சட்டம்
இல்லை என்பதால்
இப்படியா தண்டிப்பது?



படிப்பகம்

www.padippakam.com

## ஏதிலி முகாம்

ஏதிலிகள் என்று
ஏதிலி மய்யங்களுக்கு போனோம்;
அதுவே
ஏதுமில்லாது இருந்தது
தானும் ஒரு ஏதிலி
என்பது போல!

துரத்தும் துயராய்
நாடு!
நெருக்கும் துயராய்
அகதி முகாம்!
இருந்தும்,
சொந்த முகத்தோடு
சொந்தமில்லாத இடத்திற்கும்
பயணம்;
உயிரைக்காக்க!

தேவைகள் துரத்தும்போது
முகாம்களை விட்டு
வெளியேறினோம்,
இருந்த இடம்தேடி;
மீண்டும் போர்!
சாவு, மரண ஓலம்,
ரத்தவாடை....!
எவ்வளவு காலம் இருப்பது
துரத்தும் துயரோடு?
நெருக்கும் துயரோடு?
இருப்பே எனக்கு துயரம்
இருந்தும் இருக்கிறது உயிரும்!

நாங்கள் நிற்கும் இடமெல்லாம்
எங்களை அநாதையாக்க
துரும்பாய்,
காற்று வாரி வீசும்.
துரும்பாய்,
தீ சாம்பலாக்கும்
துரும்பாய்
எவ்வளவு காலம் அழிவது?


படிப்பகம்

www.padippakam.com

நாங்கள்
ஆணிவேர்களை இழந்து
சல்லி வேர்களில்
சாய்ந்து கிடக்கும்
மரங்கள்!
சல்லிவேர்களும் கூட
இரவலை எதிர்பார்த்து!

நாங்கள்
ஏதிலிகள் என்றாலும்
துயரம்
ஏராளமாய் இருப்பதால்
துயராளிகள்! - அதனால்
நாங்கள்
துயர முதலாளிகளோ?

ஏதிலி மய்யங்களும்
ஏதிலிகளாய்,
ஏராளமாய் வெறுமையோடு,
வறுமை மய்யங்களாய்!
அதனால்தான்
அகதியாய் இருக்கும்
எங்களுக்கு
அகதிபோல் இருக்கும்
மய்யங்களில்
துயர உற்பத்தி!
இருக்க இடம்
என்பதைத் தவிர.
அங்கு இருந்தது என்ன?

எங்கே எனது
'சொந்தம்' எனும்
வேர்கள்?
எங்கே எனது தொழில்
எனும் கிளைகள்?
எங்கே எனது
இடம் எனும்
அடிமரம்?
அநாதைகளுக்கு கூட
ஆதரவாய்
சொந்த நாடு,
அகதிகளுக்கு?


படிப்பகம்

www.padippakam.com

## பேச்சு வார்த்தை

ஆதிக்க பாறைக்கு
அடியில் தமிழன் -
அதற்கு மேலும்
அவனது பிடரியில்
துப்பாக்கி கத்தியை குத்தி
ஏறி நிற்பதும்
இறங்கி நிற்பதும்
சிங்களவன் விருப்பம்!
அதை மட்டும்
செய்வதா வேண்டாமா
என்று பேசுவதே
பேச்சு வார்த்தை!

காகிதங்களை நிரப்ப
ஒப்பந்தம் போடுவதும்
பொழுதுபோக
பேச்சுவார்த்தை
நடத்துவதும்
சலுகை பஞ்சாயத்தாருக்கு
சரியாகப்படலாம்!
நியாயப் பஞ்சாயத்தாருக்கு?

மாந்த நேயத்தை
மரணத்தில் தள்ளி,
இன உரிமையை
இடுகாட்டுக்கு அனுப்பி
நெஞ்சு வலிக்கு
இஞ்சி மிட்டாய்
கொடுப்பவர்கள் கூட
சிக்கலைத் தீர்க்கும்
சிறந்தவர்களா?
என்ன செய்வது
தமிழனின் கதி
அப்படி!



படிப்பகம்

www.padippakam.com

## நாடுகள் நமக்கு பாரம்!

ஈழத்தமிழா,
மொழியால் நாம் ஒன்று.
நாட்டால் இருதுண்டு - நீ
மொழியால் எனக்கு நெருக்கம்.
நாட்டால் எனக்கு தூரம் - பொதுவாய்
நாடுகள் நமக்கு பாரம்.

உனது சாவைத் தடுத்து
உன்னைக் காக்க ஓடிவந்தால்
என்கால் தடுக்கும் - அதற்கு
காரணமாய் இந்திய அரசிருக்கும்.
எதிரியை விரட்ட
ஆயுதம் எடுத்தால்
எனக்கு சிறை கிடைக்கும்,
காரணமாய் இந்திய அரசிருக்கும்!

ஈழத்தமிழா
மொழியால் நாம் ஒன்று
நாட்டால் இருதுண்டு - நீ
மொழியால் எனக்கு நெருக்கம்.
நாட்டால் எனக்கு தூரம் - பொதுவாய்
நாடுகள் நமக்கு பாரம்.

நாட்டுச் சுதந்திர பேச்சில்
தொலைந்தது நமது சுதந்திரம்
சுதந்திரம் எமக்கு இருந்திருந்தால்
வதைபடும் உனக்கு விடிந்திருக்கும்!

கடலைத் தாண்ட கலமுண்டு - கட்டுக்
காவலைத் தாண்ட வழியேது?
ராணுவம் எம்மிடம் இருந்திருந்தால்
சிங்கள ஆணவம் மீற வழியேது?


படிப்பகம்

www.padippakam.com

## நாடு - திரு ஓடு

மத்திய அரசுக்கு
மாநிலம் என்பதால்
நாம்
கால் செருப்பு!
356-ல்
உதைபடும்போது
அதுவும்
வாரறுந்த
கால் செருப்பு!
பக்கத்து இலங்கை,
நாடு என்பதால் -
மத்திய அரசுக்கு
அத்துடன்
அதிகார தோழமை கைகுலுக்கு!
நமக்கும்தான்
நாடு,
பேரிலாவது;
பிச்சை எடுக்கும் ஓட்டிற்கும்
திரு ஓடு என்பது போல!
என்ன செய்வது
இலங்கை
பன்னாட்டு முத்திரை சரக்கு
என்பதால்
அதன் தலைமையுடன்
இந்திய பண்ணாடிக்கு
பண்ணாடி உறவு!
நாம் ஆறுகோடி இருந்தும்
இருப்பது
காலடியில் என்பதால்
ஆளுக்காரன் பிழைப்பு!
இலங்கையை
நாடு என்பதற்கும்
புலியோடு கூண்டில்
குழந்தையை தள்ளி
வீடு என்பதற்கும்
என்ன வேறுபாடு?

---

குறிப்பு : நன்றி : ஊர்வலம், டிசம்பர் 1996.



படிப்பகம்

www.padippakam.com

# சிறைக்கதவுகளை வழிபடு!

குண்டடிச் சாவுக்கு
அன்றாட சாட்சியாய்
ஈழம்!
நமது ஊரில்
நமது உடம்பில்
குண்டு விழவில்லை தான்!
ஆனால்,
தமிழன் என்ற
மனதிலுமா?
நமது இனமண்டலத்தை
அரிக்கும்
அழிக்கும்
பொறுப்பை ஏற்றிருக்கும்
அரசு!
நீ சும்மா இருப்பதே
சரி என்று கருது!

இன அழிப்பு தீயில்
இன்று நீ இல்லை தான்
ஆனால் நாளை?
நியாயம்
சுடுகாட்டில் தேடப்படுகிறது;
நீ, நாடுகளின்
சிறைக்கதவுகளை வழிபடு!



படிப்பகம்

www.padippakam.com

## அரசு வாய்

பூனை
தன் குட்டியையும்
எலி குட்டியையும்
கவ்விச் செல்லும்போது
என்ன பெரிய வேறுபாடு?
ஆனால்
கொண்டு சென்று
தன் குட்டியை பத்திரப்படுத்துகிறது
பாலூட்டி,
சீராட்டி வளர்க்க.
எலிக்குட்டியை
பத்திரப்படுத்துகிறது
கடித்துக் குதறி,
வதைத்து,
வயிற்றில் செரிக்க!
அதோ
சிங்களப் பூனையின்
'அரசு' வாயில்
எலிக்குட்டிகளாய்
தமிழர்கள்!
கவ்விச்செல்வதை
மட்டும் கணக்கிட்டு
பூனை வாயை
பொது அரசென்று
ஏற்றிருக்கும்
வேடிக்கையான நாடுகள்!
பூனைக்கு ஆதரவாய்
எலி வேட்டை நடத்தும்
விசித்திர வேட்டை நாயாய்
இந்தியா!
ஆச்சரியமாக இருக்கிறது
காலடியில் கிடந்தாலும்
பாதங்களை
சுழற்றி சுழற்றி நக்கும்
நமது தலைமைகளைப் பார்த்து!
பாதப்பரப்பில்
என்னதான் இருக்கிறது
என்று
எழுதிதான் வையுங்களே
'டாக்டர்' ஆகலாம்!



படிப்பகம்

## தூங்கு தமிழா! தூங்கு!

தூங்கு தமிழா தூங்கு
எதிரிபோடும் தூக்கு கயிறு
கழுத்தை நெரிக்கும் வரைக்கும்
தூங்கு தமிழா தூங்கு!

தூக்கு கயிறை எதிரி கைகள்
சுருக்கும் ரொம்ப சுறுசுறுப்பாய்,
சுருக்க சுருக்க நீயும் கூட
துடிதுடிப்பாய் ரொம்ப சுறுசுறுப்பாய்!

மீளும் முயற்சி மாளும்;
மரணம் உன்னை வெல்லும்;
எதிரியின் மனமோ
வெற்றிக் களிப்பில் துள்ளும்.
தூங்கு தமிழா தூங்கு.

ஈழ மண்ணில் இது நடப்பு.
நாளை வருமோ நமக்கு?
தூங்கு தமிழா தூங்கு
எதிரிபோடும் தூக்கு கயிறு - உன்
கழுத்தை நெரிக்கும் வரைக்கும்
தூங்கு தமிழா தூங்கு!


படிப்பகம்

www.padippakam.com

## இலங்கை நாட்டு சுதந்திரத்தில்
## ஈழ நாட்டு அடிமை வாழ்வு

தமிழா, தோழா சொல்லும்சொல்லை
கொஞ்சம்நின்று கேள்! கேள்!! கேள்!!!

தமிழர் ரத்தம் குடிக்கவென்று
சிங்களரால் தொடங்கிவிட்ட
போர்! போர்!! போர்!!! - இங்கு

ஆறுகோடி தமிழர் வாழ்ந்தும்
பாதுகாக்க வழியுமில்லை
பார்! பார்!! பார்!!!

சொந்தவீடும் சொந்தமில்லை
சொந்தமண்ணும் சொந்தமில்லை
சொந்தபிள்ளை சொந்தமில்லை
என்றுசொல்லி அழிக்கவென்று
தொடங்கிவிட்ட போர்! போர்!! போர்!!!

வீரமுள்ள தமிழரென்று
கூறுவதில் அர்த்தமில்லை
வாழ்ந்தகால வீரமெல்லாம்
தமிழகத்து மன்னர்கால
வாள்களோடு மக்கியதா?
சொல்! சொல்!! சொல்!!!

குழந்தையென்ன பெண்களென்ன
கிழவரென்ன கிழவியென்ன
தமிழரென்று தெரிந்துவிட்டால்
குண்டுமாரி பொழிந்துவிட்டு
கொன்றுபோடும் போர்! போர்!! போர்!!!

ஈழநாட்டில் சாவும் தோழன்
உயிரைகாக்க முடியவில்லை என்றபோது
ஆண்டகால பெருமைகளை மீண்டும்பேசும்
காரியமோ வீண்! வீண்!! வீண்!!!


படிப்பகம்

www.padippakam.com

பள்ளிக்கூடம் போனபிள்ளை
வீடு சேரும் என்பதில்லை
இலங்கை என்னும் வதைக்களத்தில்
ஈழநாடு அழியுதய்யா
பார்! பார்!! பார்!!!

வெந்தபுண்ணில் அமிலம் ஊற்ற
வேதனையில் துடிதுடிக்கும்
மனதைவந்து ஆற்றுவது
யார்? யார்? யார்?

இலங்கைநாட்டு சிறைக்களத்தில்
இதுவரையும் விடுதலையே
இருக்கவில்லை என்பதுநாம்
கண்டதுதான் நேர்! நேர்! நேர்!

செத்துபோன தமிழரெல்லாம்
கட்டைபோல குவிக்கப்பட்ட
கொடுமைகளை கண்திறந்து
பார்! பார்! பார்! - நாம்
வெற்றுவேட்டு தமிழராக
வாழ்வதுதான் ஏன்? ஏன்? ஏன்?

மக்களாட்சி பேரைச்சொல்லி
மன்னராட்சி கொடுமையையும்
மிஞ்சுகின்ற கொடுமையங்கு
சீ! சீ! சீ!

தொடங்கிவிட்ட போருக்கங்கு
தடங்கலில்லை யாருமென்று
எரியுதுபார் தீ! தீ! தீ! - அது
தமிழினத்தை வேரறுக்க
எழுந்துவிட்ட போர்! போர்! போர்!

ஒட்டுவேட்டையாடி ஆட்சியேற
ஓடிவந்த நியாயமற்ற
கூட்டங்களே போ! போ! போ! - இங்கு
ஆண்டதிலும் நியாயமில்லை
ஆளஏதும் நியாயமில்லை
போ! போ! போ!



படிப்பகம்

www.padippakam.com

நீங்கள் போட்ட முழக்கம்
போலி; எல்லாம் வேடம்
நாட்டையாண்ட அத்தனையும்
தமிழர் வாழ்வை
அழிப்பதென்ற முடிவுதானே
ஏன்? ஏன்? ஏன்?

சிங்களத்தை ஆண்டவர்கள்
சொன்னசொல்லில் நின்றதில்லை
நின்றதிலும் நியாயமில்லை
என்றபோது ரெண்டுநாடு
என்பதற்கு காரணம்தான்
யார்? யார்? யார்?

சொந்த நாட்டு சிறையில்நின்று
ஈழநாட்டு வதையைகண்டும்
இன்னும் இன்றும் பொறுப்பதுதான்
ஏன்? ஏன்? ஏன்?

உன்னைக்காக்க இனத்தைக்காக்க - உனக்கு
ஏதும் வக்குமில்லை வழியுமில்லை
எண்ணி நீயே பார்! பார்! பார்!

ஆண்டகாலம் கடந்தகாலம்
இன்றுநாமே அடிமைதானோ
என்றுஎண்ணி பார்த்துவிட்டே
சொல்! சொல்! சொல்!

உலகநாட்டு சங்கம் வந்து
உதவிசெய் என்றபோதும்
நமதுநாட்டு ராவுக்கிங்கு
ஊமையாக இருக்கும்வேலை
எத்தனைநாள் இருக்குமென்று
சொல்? சொல்? சொல்?

ஊமைகூட்டம் உலுத்தர்கூட்டம்
தீமைகூட்டும் தீயகூட்டம் - அதை
ஆளவிட்டு வாழவேண்டாம்
தூர ஒட்டு. நோக்கம்வாழ
ஊரைக்கூட்டு. செல்! செல்! செல்!



படிப்பகம்

www.padippakam.com

கெட்ட எண்ணம் கெட்ட வேலை
அத்தனையும் கீழ்! கீழ்! கீழ் - அதை
விட்டதில்லை இலங்கைமண்ணை
ஆண்டவர்கள் தூ! தூ! தூ!

சிங்களர்கள் வைத்த தீயில்
வெந்த நாடு வேகும் நாடு
ஈழநாடு இலங்கை நாடு
தீயைவிட மோசமாச்சு
மூண்டுவிட்ட போர்! போர்! போர்!

சொரணையுண்டு வீரமுண்டு
நியாயமுண்டு அறிவுமுண்டு
என்பதென்றால் நில்! நில்! நில்!

வீரமுள்ள தமிழர் நாட்டில்
வெட்டிபேச்சுக் கெட்டிக்காரன்
இல்லையென்று சொல்! சொல்! சொல்!
சொன்னசொல்லில் மாற்றமில்லை
ஏற்றதனை ஏற்றுக்கொண்டு
முழுமனதாய் முடிவில்நின்று
செய்! செய்! செய்!

காலம் மாறும் கடமை மாறும்
இன்றுதேவை வீரர்கூட்டம்
வா! வா! வா!

காலமெல்லாம் கடந்துவந்து
ஓரினமாய் நம்மைகாக்கும்
தமிழை காக்கும் தமிழன்
நான்! நான்! நான்! - என்று
ஒன்றுகூடி காட்டவேண்டும்
நாம்! நாம்! நாம்!

கட்சியென்ன சாதியென்ன
மதங்களென்ன மந்தமென்ன
கிளம்பவேண்டும் கணைகளாட்டம்
பனைகளாட்டம் நிற்கவேண்டாம்
வா! வா! வா!



படிப்பகம்

www.padippakam.com

வதையொழித்து வாழவைத்து
ஈழநாட்டு தமிழரோடு
தமிழராக வாழவழி
காணவேண்டும் வா! வா! வா!

இலங்கைநாட்டு சுதந்திரத்தில்
ஈழநாட்டு அடிமைவாழ்வு
தொடங்கிவிட்ட கொடுமைதீர
நல்லவழி காணவேண்டும்
வா! வா! வா!

லஞ்சம்மேவும் நாட்டுக்குள்ளே
கொள்ளையாடும் கூட்டத்துக்கு
மக்கள்வாழ்வில் நோக்கமில்லை
மாற்றுவழி தேடவழி
பார்! பார்! பார்!

லட்சியத்தை உச்சரிப்பார்
லஞ்சத்துக்கே செயல்முடிப்பார்
உதறிவிட்டு நல்லவழி
காணவேண்டும் வா! வா! வா!

ஆண்டதாக வாழ்ந்த இனம்
வீழ்ந்துவிட்ட காலமாச்சு
மீண்டும்நாமே ஆண்டுவாழ
நீயுமின்றே வா! வா! வா!

தோள்களோடு கால்களுக்கும்
உழைக்குமுரம் இருக்கும்மட்டும்
லட்சியத்தில் எண்ணம்வைத்து
எட்டுவதை நிச்சயித்து
வா! வா! வா!

யாரும்வந்து தாங்குமுன்னர்
இனத்தைக் காக்க
இருக்கும் நாமே
தூண்! தூண்! தூண்! - அது
பழுதுபட்டால் தமிழினோடு
தமிழர்வாழ்வும் வீண்! வீண்! வீண்!



படிப்பகம்

www.padippakam.com

லட்சியத்தை மனதில்வைத்து
செய்வதென்ற உறுதியோடு
உன்னைநீயே தா! தா! தா!
ஒன்றுசேர்ந்து செய்வதுதான்
நன்றுஎன்று முடிவுசெய்து
வா! வா! வா!

இன்று அங்கு நாளை இங்கு
என்ற நிலை தோன்றும்முன்னே
சேர்! சேர்! சேர்!

நியாயமான வழிகளோடு
தேவையான களங்களுக்கு
தேடிச்சேரும் காலமிது
வா! வா! வா!


படிப்பகம்

www.padippakam.com

## நட வெற்றியை நோக்கி...!

இந்தி ஆதிக்க,
அநியாய,
மனிதாபிமானமற்ற
ஆட்சியாளர்களின்
காலடிச் செருப்பின்
கீழ் தமிழகம்!
மேல் நின்று கொண்டு
சிங்கள அரசுடன்
கை குலுக்கி
கள்ள உறவு!
ஒ! தமிழா!
நீ, இந்தியனா?
எப்போது நீ
செருப்பாய் அல்ல,
செருப்பின் அடியாய்
ஆனாய்?

அதிகாரப் பசியில்
மசோதா மன்ற
முதல்வருக்காக
கையேந்தி நிற்கும்
நமது 'வழிகாட்டிகள்'!
இவர்களது அதிகாரம்
உன்மீது மட்டும்தான்!
மற்றபடி மத்திய அரசுக்கு
காலடிச் சேவை!

இவர்களால் தானா
தமிழினத்திற்கு வாழ்வு?
தமிழா! களம் கற்பிக்கிறது
கற்றுக்கொள்!
தோழா!
காலம் ஒடுகிறது
ஆயுளைக் காட்டி!

மனிதா,
நெருக்கடி சுட்டுகிறது
தேவையை காட்டி!
நண்பனே,
கணக்கிட்டு
குறிவைத்து நட
வெற்றியை நோக்கி......!



படிப்பகம்

www.padippakam.com

# இலட்சிய ஏவுகணை

லட்சியத்தோடு மனதை பொருத்து!
அச்சம் கொண்டு
லட்சியத்தை கழற்றிவிடாதே!

லட்சியத்திற்காக மனதை கொளுத்து
சபலங்கொண்டு
லட்சியத்தை ஒதுக்கிவிடாதே!

லட்சியத்திற்காக ஒளியாய் எழு! - தடை
இருள்மலை என்று
லட்சியத்தை விட்டுவிடாதே!

லட்சியத்திற்காக எச்சரிக்கையாய் இரு.
பொய்வாக்கை நம்பி
லட்சியத்தை கிடப்பில் போட்டுவிடாதே!

பரந்த வெளியில் திரியும் இலக்கையும்
குறித்தே அடிக்கும் ஏவுகணையாய் இரு!
இல்லை என்றால்
பொரிந்தே அழியும்
மத்தாப்பு ஆவாய்!

லட்சியத்தின் இலக்கு உயரே - உன்னை
தாக்க துடிக்கும் சக்திகள்
கூட உயரே,
உன்னை இலக்காய் குறித்து!
நீ மட்டும்
உணவும் உடையும்
வீடும் மட்டும்
இலட்சியம் என்றா இருக்கிறாய்?

உன்னை குறி வைக்கும்
எதிரியை உற்றுப்பார்!
உனது லட்சியம் தெரியும்!



படிப்பகம்

www.padippakam.com

உன்னை அழிக்க துடிக்கும்
பகைவரை பகுத்தறி,
உனது லட்சியம் புரியும்!

உனது உரிமைகளை,
அவைகளுக்கு வந்த அழிவுகளை
எண்ணிப்பார்!
லட்சியத்தோடு உள்ளம் கிளரும்!

தேர்ந்தெடு இலக்கை,
தேர்ந்தெடு களத்தை,
தேர்ந்தெடு பொழுதை,
குறித்திடு தேதி,
கொடுத்திடு சேதி;
வெற்றி! வெற்றி! வெற்றி!


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்